பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 06 திங்கட்கிழமை 22.11.2021 கதிர் 17

### இனி இது ரகசியம் அல்ல!

கொழும்பிலிருந்து மூத்த சிங்கள ஊடகவியலாளர் ஒருவர் தொலைபேசி அழைப்பு எடுத்தார். கனடாவில் என்ன நடந்தது என்று கேட்டார். கூட்டத்தில் குழப்பம் என்றேன். அவர் கூறிய விளக்கம், 'யதார்த்தவாதிவெகுசன விரோதி' என்பதை

பக்கம்02

## அதியுயர் சபையான நாடாளுமன்றத்தில்

# தமிழர்களின் பிரதிநிதிகள் என்ன செய்கின்றார்கள்?



## யாழில் ஞானசார தேரர் கேள்விக்கணை

யாழ்ப்பாணம், நவம்பர் 22

தமிழர்களின் பிரதிநிதிகள் அதியுயர் சபையான நாடாளுமன்றத்தில் என்ன செய்கின்றார்கள்? என்று 'ஒரே நாடு – ஒரே சட்டம்' செயலணியின் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர் கேள்வி எழுப்பினார்.

11

## நேற்று 697 பேருக்கு கொரோனா தொற்று

இலங்கையில் நேற்று 697 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய நாட்டில் இது வரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 56 ஆயிரத்து 626 ஆக எகிறியுள்ளது.

அதேவேளை, கொரோனாத் தொற்றிலிருந்து மேலும் 381 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதன்படி நாட்டில்

2

## உழவு இயந்திரத்தின் கலப்பையில் அகப்பட்டு 5 வயது சிறுவன் மரணம்

### வவுனியாவில் பரிதாபச் சம்பவம்





(வவுனியா நிருபர்)

வவுனியா, பாலமோட்டைப் பகுதியில் உழவு இயந்திரத்தின் கலப்பையில் அகப்பட்டு 5 வயது சிறுவன் பரிதாபகரமாக மரணமடைந்துள்ளார்.

நேற்று மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும்

2

### பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்

## மாத்தறை சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதியை மகசினுக்கு மாற்றுமாறு கோரிக்கை



(வவுனியா நிருபர்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட ஒரேயொரு கைதி மாத்தறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவரைக் கொழும்பு மகசின் சிறைச்சாலைக்கு மாற்றுமாறு அவர் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

– இவ்வாறு தமிழ்த்

2

## பட்ஜட்டை எதிர்க்க மு.கா. தீர்மானம்!

ராஜபக்ஷ அரசின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிக்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயாபீடக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2

## வீட்டிலிருந்த குடும்பப் பெண்ணை கட்டி வைத்து விட்டுக் கொள்ளை!



முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூதன்வயல் கிராமத்தில் வீட்டில் தனிமையில் இருந்த பெண்ணைக் கட்டிவைத்துவிட்டு வீட்டில் இருந்த பணம், நகை, தொலைபேசி என்பன கொள்ளையிடப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பூதன்வயல்

2

## மேலும் 19 பேர் பரிதாபச் சாவு!

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 19 பேர் சாவடைந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல

11

## மாவீரர் நினைவேந்தலுக்குத் தடை கோரிய விண்ணப்பங்கள் மீதான பரிசீலனை இன்று

மாவீரர் நாள் நிகழ்வுக்குத் தடை விதிக்கக் கோரி பருத்தித்துறை மற்றும் மல்லாகம் நீதிவான் நீதிமன்றங்களில் பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மீதான பரிசீலனை இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை, நெல்லியடி, வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளால் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றிலும், சுன்னாகம், தெல்லிப் பழை மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளால் மல்லாகம் நீதிவான் நீதிமன்றிலும் கடந்த வெள்ளிக்கிழமை மாவீரர் நாள் நிகழ்வுகளுக்குத் தடை கோரி விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டன.

அதில் நவம்பர் 21ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் நவம்பர் 28ஆம் திகதிவரை இந்த தடை உத்தரவு வழங்குமாறு பொலிஸாரால் கோரப்பட்டுள்ளது.

குற்றவியல் சட்டக்

2

## இலங்கை மத்திய வங்கிக்கு 4 புதிய உதவி ஆளுநர்கள்!

இலங்கை மத்திய வங்கி நான்கு புதிய உதவி ஆளுநர்களை நியமித்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற நாணயச் சபைக் கூட்டத்தில், மத்திய வங்கியின் நான்கு சிரேஷ்ட அதிகாரிகள் உதவி ஆளுநர்களாகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர் என்று மத்திய வங்கி அறிவித்துள்ளது.

கே. ஜி. பி. சிறிகுமார, டி. குமாரதுங்க, யு.எல்.முதுகல மற்றும் சி. பி. எஸ். பண்டார ஆகியோர் 2021 நவம்பர் 17ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் உதவி ஆளுநர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உணர்த்தியது.

"கனடா கூட்டத்தில் சுமந்திரனுக்கு எதிராக ஒரு கும்பல் கூச்சல் போட்டு கூட்டத்தையே குழப்பிய விடயம், தென்னிலங்கை சமூக ஊடகங்களில் வைரலாகப் பரவுகின்றது. எல்லா இடங்களிலும் பேசு பொருளாக அடிபடுகின்றது. அது மட்டுமல்ல, சிங்களவர்களுக்கு அதனால் பெரும் கொண்டாட்டம். மகிழ்ச்சி" – என்றும் அவர் கூறினார்.

"வைரலாகும் அந்த வீடியோவில் தமிழில் என்ன கூச்சலிடுகின்றார்கள் என்று தெரியுமா" என்று கேட்டேன்.

"தெரியவில்லை. ஆனால் ஓரிரு சொற்கள் புரிகின்றன, 'துரோகி' என்ற சொல்லின் அர்த்தம் விளங்குகின்றது." – என வழமைபோல ஆங்கிலத்தில் பதில் தந்தார்.

"ஏன் சிங்கள மக்களுக்குக் கொண்டாட்டம்?" – என்று கேட்டேன்.

"தமிழர்களுக்காக, சிங்கள மக்களுக்குக் கோபம் வரத் தக்க விதத்தில், உரிமை பற்றிப் பேசுகின்றவர் இவர்தானே... இவரின் சட்டத் திறமையை வைத்துத்தானே தமிழர் தரப்பு எங்களுக்கு நீதிமன்றங்கள் ஊடாகத் தண்ணி காட்டுகின்றது. அவரை அவரது மக்களே துரத்துவது என்றால் சிங்கள மக்களுக்குச் சந்தோஷம் தானே.... அதுவும் ராஜபக்ஷ சகோதரர்களின் ஆதரவாளர்களுக்கு – குறிப்பாக மொட்டுக் கட்சிக்காரர்களுக்கு – இரட்டிப்புச் சந்தோஷம். தங்கள் தலைவர்கள் என்ன முயற்சி எடுத்தாலும் சட்டம் மூலம் அதற்கு தடை போடுபவரை அவரது மக்களே தூற்றினால் சந்தோஷமாக இருக்காதா? அதுவும் இங்குள்ள தமிழ் அரசியல் தலைமைத்துவத்துக்கு புலம்பெயர் தமிழரின் ஆதரவு இல்லை என்றால் அவர்கள் அங்கு – உள்நாட்டில் – 'வீக்' ஆகி விடுவார்கள் என்பது சிங்களவருக்குப் பிளஸ் பொயிண்ட்தானே...!" – என்று பல நியாயப்பாடுகளை அவர் எனக்கு எடுத்துரைத்தார்.

நான் அவருடன் விவாதிக்கப் போகவில்லை. ஆனால் ஒரே ஒரு கேள்வி கேட்டேன். "அந்தக் கூட்டத்துக்குப் புலிக் கொடி ஆயுதத்துடன் வந்து திட்டியவர்கள் சுமந்திரனை என்ன சொல்லி அழைத்தார்கள் என்பது தெரியுமா?" – என்று நான் கேட்டேன்.

"அடிக்கடி துரோகி என்றார்கள். இடையிடையே 'கோட்டாவின் கையாள்' என்றும் திட்டினார்கள்." – என்றேன் நான்.

"அப்படியும் பேசினார்களா? அது உண்மை என்றால் ஏன் அவரைத் திட்டியதற்கு கோட்டாவின் ஆள்கள் மகிழ்ச்சி கொண்டாட வேண்டும்.?" – என்று அவரே விளங்காதவராக – புரியாதவராக – என்னைக் கேட்டார்.

நான் "யதார்த்தவாதி வெகுசன விரோதி" என்ற தமிழ்ப் பதத்தின் கருத்தை எனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் அவருக்குப் புரிய வைத்தேன்.

சுமந்திரனின் கூட்டத்தில் கூச்சலிட்டுக் குழப்பம் விளைவித்தவர்களிடம் கேட்பதற்கு என்னிடம் இரண்டு கேள்விகள் உள்ளன.

அவையும் கூட அங்கு – கூட்டத்தைக் குழப்பிய போது – அவர்கள் எழுப்பிய கேள்வியை ஒட்டி எழுந்த சந்தேகங்கள் தான்.

ஒன்று – "எங்களுக்கு உங்கள் தீர்வு வேண்டாம் தமிழீழம்தான் வேண்டும்." – என்றீர்களே! நிச்சயம் அந்தத் தனி நாட்டை சுமந்திரன் பெற்றுத் தரமாட்டார். பெற்றுத் தருவேன் என்று வாய்ச்சவடால் அடிக்கவும் மாட்டார். சரி, நீங்கள் கூறியபடி 'துரோகி சுமந்திரனை' எங்கள் அரசியலிருந்து துரத்தியடிப்போம். அதற்குப் பிறகு நீங்கள் கூறும் தனிநாட்டுத் தீர்வை யார் பெற்றுத் தருவது? நீங்கள் கனடாவிலும், பிற இடங்களிலும் புலிக்கொடி பிடித்துப் போராட்டம் நடத்த, இங்கு நாடு பிளவுபட்டு தன்பாட்டில் தனிநாடு வந்து விடுமா?"

அடுத்த ஒரு கேள்வி. இதைக் கேட்பதற்கு எனக்கு உரிமை உண்டு. எந்த அச்சுறுத்தல் வந்தும் மண்ணை விட்டு ஓடாத எம்தேச மக்களில் நானும் ஒருவன். (அதற்கும் கூட அங்கிருந்தபடி நாமம் சூட்ட தகுதியான சூரர்கள் நீங்கள். இங்கு ராஜபக்ஷக்களின் கொடூரத்தை எழுத்தில் துணிச்சலுடன் வெளிக் கொணரும் எங்களை உங்கள் பசப்பு வாயால் 'கோட்டாவின் ஆள்' என்று நாமம் சூட்ட நீங்கள் தயங்க மாட்டீர்கள். அதற்கு நேரமும் செல்லாது. ஆனால் அவை பற்றி அலட்டிக் கொள்ளும் நிலையில் நாங்களும் இல்லை, இனி கேள்விக்கு வருகிறேன்.

கூட்டமைப்பை பார்த்து – அல்லது சுமந்திரனைப் பார்த்து – அங்கிருந்த சிலர் திரும்பத் திரும்ப ஒரு கேள்வியை எழுப்பினர்.

"இந்தப் பன்னிரண்டு வருடங்களாக என்ன பிடுங்கினீர்கள்?" – என்பதுதான் அந்தக் கேள்வி.

அந்தக் கேள்வியை எழுப்பியவர்கள் ஏதோ 2009 மே வரை தலைவருக்குப் பக்கத்தில் நின்று போராட்டத்தை ஒப்பேற்றி முடித்துவிட்டு, அதற்குப் பிறகு, பொறுப்பை சுமந்திரன் ஆதியோரிடம் விட்டுவிட்டு வந்தவர்கள் மாதிரிக் கேள்வி எழுப்பினர். சரி, அப்படியே இருக்கட்டும்.

தனிப் பிஸ்டலுடன் தொடங்கிய விடுதலைப் போராட்டத்தை முப்படை கொண்டு – தனியான தாயக தேசத்தை ஒரு நாடு போல வைத்திருந்த – ஒரு கட்டமைப்பை முப்பது ஆண்டுகளில் கட்டி எழுப்பி, கடைசியாக நாங்கள் சாதித்தது என்ன?" – என்ற கேள்வி சுமந்திரன் பக்கத்திலிருந்து வந்திருக்குமானால், அந்தப் போராட்டத்துடன் நின்ற நான் உட்பட நாங்களும், இன்று கனடாவில் பதுங்கிக் கொண்டிருக்கும் அந்த நண்பர்களான நீங்களும் என்ன பதில் கூறுவது?

போராட்டத்தின் முடிவில், தோற்றுப் போன சமூகமாக – பௌத்த, சிங்களப் பேரினவாதத்தினால் எப்படியும் பந்தாடப்படக் கூடிய – மிக ஈனமான நிலையில் கைவிடப்பட்டவர்களாகவே நாம் இருந்தோம். இந்தப் பத்து வருடங்களுக்குள் கணிசமான சுயத்தைத் தொலைத்த நாம், இருப்பதையும் தொலைத்து விடும் பேராபத்தில் சிக்குப்பட்டிருக்கையில், அங்கிருந்து கொண்டு நீங்கள் 'மகாதத்துவம்' பேசுவதில் அர்த்தமில்லை.

சுமந்திரனை விடுங்கள், தொலைந்து போகட்டும். உங்கள் கருத்தில் ரணில் அதிகாரத்தில் இருந்தால் அவர் 'ரணிலின் கையாள்'; மஹிந்தர் அதிகாரத்தில் இருந்தால் 'மஹிந்தரின் கையாள்'; கோட்டாபய அதிகாரத்தில் இருந்தால் 'கோட்டாவின் கையாள்.' அப்படி அங்கிருந்து தத்துவம் பேசி, இந்தக் குழப்பத்தில் கனடாவில் பிழைத்துக் கொள்ளாமல் இங்கு வாருங்கள். 'துரோகி சுமந்திரனை' ஒழித்துக் கட்டிவிட்டு, நானும், நாமும், நீங்களும் சேர்ந்து, சுமந்திரன் எச்சரித்தமை போல அழிந்து வரும் தாயகத்தைக் காப்போம். அதற்கு நீங்கள் தயாரா?

எங்களோடு இங்கு நீங்கள் இருந்து கொண்டு, இந்தத் துரோகிப் பட்டத்தை சுமந்திரனுக்கு நீங்கள் தொடுத்திருந்தால் அதில் நியாயமுண்டு. கனடாவில் பதுங்கிக் கொண்டு, 'கனடாப் பக்கம் வராதே!' என்று சுமந்திரனை மட்டும் அல்ல, கருணா, பிள்ளையானைக் கூட கலைப்பதற்கு உங்களுக்குத் தார்மீகத் தகுதி இல்லை.

இங்கு தாயக மண் பறிபோய்க் கொண்டிருக்கின்றது. உங்களின் அந்தக் கூட்டத்தில் சுமந்திரன் சுட்டிக்காட்டியமை போல, இந்தப் போக்கு இப்படியே தொடர்ந்தால் தமிழர் தாயகமும் இங்கு மிஞ்சாது, தமிழனும் மிஞ்சான் என்பதுதான் நிலைமை.

நீங்கள் நேற்றுப் பெருஞ்சாதனை செய்தமை போல 'கோட்டாவின் கையாள்' சுமந்திரனை இங்கிருந்தும் 'துரோகி' என்று பட்டம் சூட்டி எல்லோரும் சேர்ந்து கலைத்து விடுவோம்.

உங்கள் ஒவ்வொருவருக்கும் இங்கே (களத்தில்) வாழ ஆபத்து இருப்பது போலத் தான் எங்கள் ஒவ்வொருவருக்கும் உள்ளது. ஆனாலும் நாங்கள் வாழுகிறோம். இப்போது 'கோட்டாபயவின் கையாள்' துரோகி சுமந்திரனைத் கலைக்க வேண்டும். நீங்கள் குறிப்பிட்டமை போல தமிழீழம் பெறவேண்டும். ஆகவே வாருங்கள். துரோகியான சுமந்திரனைத் துரத்தியமையால் அந்தப் பொறுப்பு – தமிழர் தாயகத்தை காப்பாற்றும் பொறுப்பு – எங்களையும் உங்களையும்தான் சேர்ந்தது. சுமந்திரனைத் துரோகிப் பட்டம் சூட்டிக் கலைப்பதற்கு உங்களுக்கு இருந்த வீராவேசம் போதாதா தமிழர் தாயகத்தை இங்கு காப்பதற்கு? ஆகவே வாருங்கள். பார்த்திருக்கிறோம். வருவீர்களா?

ஒரே ஒரு பிரச்சினை. இங்கு வேலை இல்லாவிட்டால் 'சோஷல்' என்ற பெயரில் கொடுப்பனவு தரமாட்டார்கள். அது பழகிவிட்ட உங்களுக்கு ஒரு பிரச்சினை இருக்கும். அவ்வளவுதான்.

இங்கிருந்தும் துரோகி சுமந்திரனைத் துரத்தியடிப்போம். கோட்டாவின் ஆளான அவர் கொழும்பில் போய்ப் பதுங்கட்டும்.

எப்போது வருகின்றீர்கள்? விளக்குமற்றுடன் காத்திருக்கிறோம். உங்களை வரவேற்க அல்ல. நீங்கள் இங்கு வந்து சேர்ந்ததும், உங்களுடன் சேர்ந்து சுமந்திரனைத் துரத்தியடிப்பதற்கு – 'கோட்டாவின் ஆளான' அவர் கொழும்பில் போய் ஓடிப் பதுங்குவதற்கு....!

– மின்னல் –

## உழவு இயந்திரத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரியவருவதாவது:-

வவுனியா, பாலமோட்டைப் பகுதியில் உள்ள தமது காணியை குடும்பஸ்தர் உழவு இயந்திரன் மூலம் உழுதபோது தனது இரு பிள்ளைகளையும் உழவு இயந்திரத்தின் இரு மருங்கிலும் இருத்தி விட்டு உழுதுள்ளார். இதன்போது உழவு இயந்திரத்தின் ஒரு பக்கத்தில் அமர்ந்திருந்த சிறுவன் உழவு இயந்திரம் உழுத போது தவறி கீழே விழுந்து உழுதுகொண்டிருந்த கலப்பைக்குள் அகப்பட்டு வெட்டுக் காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

சிறுவனை மீட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வாகனத்தில் ஏற்றிக்கொண்டு வந்தபோதும் வைத்தியசாலைக்கு வருவதற்கு முன்னரே சிறுவன் இறந்துள்ளார்.

வவுனியா, பாலமோட்டையைச் சேர்ந்த க.கனிசன் (வயது – 5) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சடலம் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் வைத்தியசாலைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பட்ஜட்டை எதிர்க்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரசின் வரவு – செலவுத் திட்டத்தை எதிர்ப்பது என்ற கட்சியின் உயர்பீடக் கூட்டத்தின் தீர்மானத்தை கட்சி எம்.பிக்கள் மீறினால் அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளை எடுக்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி. தீர்மானித்துள்ளார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கூட்டத்தில் பேசிய உயர்பீட உறுப்பினர்கள் அனைவரும் அரசின் வரவு – செலவுத் திட்டத்தை எதிர்க்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

அதேபோல் அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவளித்த எம்.பிக்கள் மீது அப்போதே கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால், இந்த நிலை இன்று ஏற்பட்டிருக்காது எனவும் பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதையடுத்து , இம்முறை பட்ஜட்டை ஆதரவளிக்கும் எம்.பிக்களிடம் விளக்கத்தைக் கோரி அதன் பின்னர் அந்த விளக்கம் திருப்தியில்லாத பட்சத்தில் அவர்களின் கட்சி உறுப்புரிமையை நீக்குவது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

## மாவீரர் நினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கோவையின் 120ஆவது பிரிவுக்கு அமையவும், பயங்கரவாத தடைச் சட்டத்தின் படியும், இந்த நிகழ்வை நடத்துவது குற்றம் என்றும் இதனைத் தடை செய்யுமாறும் பொலிஸார் கோரியுள்ளனர்.

அதன்போது , நாட்டில் நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல் சட்டத்தின் பிரகாரமும் பொதுமக்களை ஒன்றுதிரட்டுவதற்குத் தடை உள்ளதாகவும் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த விண்ணப்பங்கள் கடந்த வெள்ளிக்கிழமை இரண்டு நீதிமன்றங்களிலும் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டபோது, பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளோர் மன்றில் முன்னிலையாகவில்லை.

இதனைத் தொடர்ந்து அந்த விண்ணப்பங்கள் மீதான பரிசீலனை இன்று திங்கட்கிழமை நடைபெறும் எனவும், அதன் பின்னர் கட்டளை பிறப்பிப்பதாக குறிப்பிட்ட நீதிமன்றங்கள், பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை சேர்ப்பிக்க உத்தரவிட்டன.

இதேவேளை, யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸாரினால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்துக்கு அனுமதியளித்த யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம், தடை உத்தரவுக் கட்டளையை கடந்த வெள்ளிக்கிழமை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வீட்டிலிருந்த குடும்பப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிராமத்தில் வீட்டில் தனிமையில் வாழ்ந்து வந்த இளம் குடும்பப் பெண்ணின் வீட்டுக்குள் நுழைந்த மூன்று கொள்ளையர்கள் தங்களை அடையாளம் காணாதவாறு முகத்தை மூடிய நிலையில் வேலியை வெட்டி காணிக்குள் சென்று வீட்டு யன்னல் வழியாக வீட்டுக்குள் நுழைந்து அங்கிருந்த பெண்ணின் கை, கால்களைகட்டி வைத்து விட்டு பெண்ணை சத்தமிட முடியாதவாறு வாக்குள் துணிகளை அடைந்து சித்திரவதை செய்து வீட்டில் இருந்து சுமார் 25 இலட்சம் பெறுமதியான பொருள்களைக் கொள்ளையடித்து சென்றுள்ளனர்

கணவனை பிரிந்த நிலையில் தனது பிள்ளைகளை சிறுவர் இல்லத்தில் சேர்த்திருந்த நிலையில் தனிமையில் வீட்டில் இருந்த பெண்ணிடமே கொள்ளையர்கள் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் .15 பவுண் நகை, 5 இலட்சம் ரூபா பணம் மற்றும் பெறுதியான தொலைபேசி என்பன கொள்ளையடிக்கப்பட்டுள்ளன என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த பெண்ணின் வீட்டில் தடவியல் பொலிஸார், மோப்பநாய்கள் சகிதம் வந்து ஆய்வு செய்த நிலையில், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முள்ளியவளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நேற்று 697...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதுவரை கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 26 ஆயிரத்து 734 ஆக அதிகரித்துள்ளது.

## மாத்தறை சிறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

மாத்தறை சிறைச்சாலைக்குச் சென்று பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள த.நிமலன் என்ற கைதியை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் நேற்று பார்வையிட்டிருந்தனர்.

இது தொடர்பில் கஜேந்திரகுமார் எம்.பி. கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள வவுனியாவைச் சேர்ந்த தங்கவேல் நிமலன் என்பவரை மாத்தறை சிறைச்சாலையில் பார்வையிட்டு பேசியிருந்தோம். அவர் சார்ந்த வழக்கில் 3 சந்தேகநபர்கள் இருக்கும் நிலையில் அவரை மட்டும் தனிமைப்படுத்தி மாத்தறை சிறைச்சாலையில் தடுப்பில் வைத்துள்ளார்கள். ஏனைய இருவரும் கொழும்பு மகசின் சிறைச்சாலையில் இருக்கின்றார்கள். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்கள் என்ற அடிப்படையில் அவர் மட்டுமே மாத்தறை சிறைச்சாலையில் உள்ளார். ஒரேயொரு தமிழ்க் கைதியாகவும் இந்தச் சிறைச்சாலையில் அவரே உள்ளார். அவருக்கு மொழி சார்ந்த வசதிகளும் குறைவாக உள்ள நிலையில் அவர் எம்மிடம் அவசர கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட ஏனையவர்களைத் தடுத்துவைத்துள்ள சிறைச்சாலைகளில் தன்னையும் சேர்த்துக்கொள்ளுமாறு அவர் கோரியுள்ளார். அது சம்பந்தமாக நாங்கள் நீதி அமைச்சர் அலி சப்ரியுடன் பேசுவோம்.

அத்துடன், கைதிகளை விடுவிப்பதற்குரிய அழுத்தங்களை நாம் தொடர்ந்தும் கொடுப்போம். அதேசமயம் அது நிறைவேறும் வரை இந்தக் கைதிகளை அவர்களது சொந்த மாவட்டத்தில் உள்ள சிறைச்சாலைகளுக்கு மாற்றுமாறு கோரிக்கையையும் முன்வைத்துள்ளோம். தொடர்ச்சியாக இந்த வரவு – செலவுத் திட்டக் காலப்பகுதியில் கூட உரிய அமைச்சுக்குக் கீழ் வரக்கூடிய விடயங்களை வலியுறுத்துவோம் என்பதையும் அவருக்குத் தெரிவித்துள்ளோம் – என்றார். (100)

# பைஸர் தடுப்பூசியின் பாவனை தொடர்பில் எச்சரிக்கை விடுப்பு

கொழும்பு, நவ. 22

இலங்கையில் பைஸர் தடுப்பூசி செலுத்துவதன் ஊடாக, தேவையற்ற பாதிப்புக்களை ஏற்படுத்தும் அபாயம் காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினரும், வைரஸ் தொடர்பான விசேட நிபுணருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

பைஸர் தடுப்பூசியின் செயற்பாடு தொடர்பில் விஞ்ஞான ரீதியில் சந்தேகம் நிலவுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பைஸர் தடுப்பூசி, கொரோனாப் பரவலுக்கு பின்னரான காலத்திலேயே முதல் தடவையாக பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாகவே தனக்கு இந்தத் தடுப்பூசி தொடர்பில் சந்தேகம் நிலவுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



இலங்கைக்கு பைஸர் தடுப்பூசியை இறக்குமதி செய்வதை இயலுமானளவு குறைத்துக்கொள்ளுமாறும், மாற்று தடுப்பூசிகளை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.



## பொலிஸ் உத்தியோகத்தர் கொவிட் தொற்றால் சாவு!

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவில் கடமையாற்றி வந்த தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கொவிட் தொற்றால் உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை தலைமையக பொலிஸ் நிலையத்தில் விசாரணை பிரிவில் கடமையாற்றி வந்த ஹப்புத்தளை பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனத் தெரிய வருகின்றது. திருகோணமலை பொது வைத்தியசாலையில் உணவு ஒவ்வாமை காரணமாக கடந்த 19ஆம் திகதி சேர்க்கப்பட்ட நிலையில் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்படவில்லை.

ஆனாலும் ஒவ்வாமை காரணமாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார் எனவும், இதனையடுத்து அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை மூலம் கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டதாகவும் வைத் தியசாலை பேச்சாளரொருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது உயிரிழந்தவரின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், திருகோணமலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## குடும்பப் பெண்ணைக் கட்டிவைத்து முல்லைத்தீவில் துணிகரக் கொள்ளை

முல்லைத்தீவு, முள்ளியவளை பிரதேசத்துக்கு உட்பட்ட பூதன்வயல் கிராமத்தில் வீட்டில் தனிமையில் இருந்த பெண்ணை கட்டிவைத்துவிட்டு வீட்டில் இருந்த பணம், நகை, தொலைபேசி என்பன கொள்ளையர்களால் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில் –

பூதன்வயல் கிராமத்தில் வீட்டில் தனிமையில் வாழ்ந்து வந்த இளம் குடும்பபெண்ணின் வீட்டுக்குள் நுழைந்த மூன்று கொள்ளையர்கள் தங்களை அடையாளம் காணாதவாறு முகத்தை மூடி வீட்டுக்குள் நுழைந்து வீட்டில் இருந்த பெண்ணின் கை,கால்களைக் கட்டி வைத்துவிட்டு வீட்டில் இருந்து சுமார் 25 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை கொள்ளையடித்துள்ளனர்.

கணவனை பிரிந்த நிலையில் தனது பிள்ளைகளை யாழ்ப்பாணத்தில் விடுதியில் தங்கி படிக்கவைத்துவிட்டு தனிமையில் இருந்த பெண்ணிடமே கொள்ளையர்கள் கொள்ளையடித்துள்ளனர்.

16 பவுண் நகை, 5 லட்சம் ரூபா பணம் மற்றும் பெறுமதியான தொலைபேசி என்பன கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மூன்று பேர் கொண்ட கொள்ளைக் கும்பல் இந்த கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்டுள்ளதாகமுள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்கு தடயவியல் பொலிஸார் வரவழைக்கப்பட்டு திருடர்களின் தடயங்கள் எடுக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பிலான விசாரணைகளில் முள்ளியவளை பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

## பல்வேறு குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய 13 பேர் கைது



பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய 13 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக 6 மதுபானசாலைகளின் சுற்றிவளைப்புகளின் அறுவர் கைதுசெய்யப்பட்டுள்ளமையுடன் 119 லீற்றர் மதுபானமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலும் 371 லீற்றர் கோடா, 2 செப்புத் தகடுகள், 2 எரிவாயு அடுப்புக்கள், 3 பீப்பாய்கள் என்பற்றையும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இதேவேளை கொழும்பு, மட்டக்குளிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பார்கியூஸன் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் தீர்வை வரியின்றி நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட 360 புகைத்தல் பொருள்களுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இதன்போது கொழும்பு 15 ஐச் சேர்ந்த 49 வயது நபரே கைதாகியுள்ளார்.

குருநாகல், குளியாப்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஜயக்கோடிவத்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் அனுமதிப்பத்திரமின்றி மணல் அகழ்வில் ஈடுபட்ட நபர் ஒருவரை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைதுசெய்துள்ளனர். குளியாப்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இரத்தினபுரி, கஹவத்த, குருவிட்ட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சுரங்கம் தோண்டும் பணியில் ஈடுபட்ட ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பாத்தகட, குருவிட்ட ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 18, 18, 41, 42, 44 வயதுகளையுடைய ஐவரே இதன்போது கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## தமிழ்க் குடும்பத்துக்கு ஆஸியில் கௌரவம்






புகலிடக்கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நிலையில் கிறிஸ்மஸ் தீவு அகதிகள் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நடேஸ் பிரியாவிற்கு Woman of the Year என்ற கௌரவத்தை ஆஸ்திரேலியாவின் முக்கிய மாதர் சஞ்சிகையொன்று வழங்கியுள்ளது.

ஆஸ்திரேலியாவில் புகலிடக் கோரிக்கை மறுக்கப்பட்டு இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படவிருந்த நிலையில், அதற்கெதிராக முழுக்குடும்பமும் போராடியது. இவர்களுக்கு ஆஸ்திரேலியாவின் பல தரப்புகளிலிருந்தும் ஆதரவுக்கரம் நீட்டப்பட்டுள்ளது.

இந்த பின்னணியில், தனது குடும்பத்தின் இருப்புக்காக போராடிய பிரியாவுக்கு ஆஸ்திரேலியாவின் முக்கிய மாதர் சஞ்சிகை Women Of The Year என்ற கௌரவத்தை வழங்கியுள்ளது.

பிரான்ஸில் 1937 இல் ஆரம்பிக்கப்பட்டு பல்வேறு நாடுகளிலிருந்து வெளிவந்துகொண்டிருக்கும் இந்த சஞ்சிகை மூலம் பிரியா உட்பட 9 பெண்களுக்கும், பிரியா குடும்பத்தின் விடுதலைக்காக போராடிய The Women of Biloela என்ற குழுவுக்கும், இந்த கௌரவத்தை வழங்கியுள்ளது.

பிரியாவுடன் Grace Tame, Brittany Higgins, Ash Barty, Ellie Cole, Emma McKeon, sareena Clanton, Charlee Fraser, Christine Holgate, Chanel Contos ஆகிய பெண்களுக்கு சாதனைப் பெண்கள் என்ற கௌரவத்தை இந்த சஞ்சிகை வழங்கியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

குறித்த குடும்பம் கிறிஸ்மஸ் தீவு தடுப்புமுகாமிலிருந்து விடுவிக்கப்பட்டு தற்காலிகமாக பெர்த்தில் வாழ அனுமதிக்கப்படுவதாக குடிவரவு அமைச்சர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் ஆபத்தான இடங்களை அடையாளம் காட்டும் புதிய செயலி!

இலங்கையில் மண்சரிவு ஏற்படும் இடங்களை இலகுவாக அடையாளம் காணக்கூடிய கையடக்க தொலைபேசி செயலியை அறிமுகப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஆசிரி கருணாவர்தன இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தால் மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்ட பின்னர், கையடக்கத் தொலைபேசி செயலி அந்த இடங்களை காண்பிக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மண்சரிவு அபாயம் உள்ள பகுதிகளில் வசிப்பவர்களுக்கும் அந்த பகுதி வழியாகச் செல்பவர்களுக்கும் இந்த செயலி பயனுள்ளதாக இருக்கும் என பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் இந்த கையடக்க தொலைபேசி செயலி அறிமுகப்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## முக்கிய நியமனம் இன்று

மிக முக்கியமான நியமனம் ஒன்று குறித்துப் பரிசீலிப்பதற்காக இலங்கையின் நாடாளுமன்றக் கவுன்ஸில் இன்று திங்கட்கிழமை கூடுகின்றது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் உட்பட ஆணைக்குழுவின் இரண்டு வெற்றிடங்களுக்கு உரியவர்களை நியமிப்பதற்கான பரிசீலனை இன்று நடைபெறவிருக்கின்றது.

இந்த நியமனங்கள் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பரிந்துரைக்கும் இரண்டு பெயர்களைப் பரிசீலித்து, அவை குறித்துத் தனது கருத்துரையை மாத்திரம் நாடாளுமன்றக் கவுன்ஸில் ஜனாதிபதிக்கு அறிவிக்கும். அவ்வளவுதான். இது விடயத்தில் நாடாளுமன்றக் கவுன்ஸிலின் அதிகாரம் அவ்வளவுதான். கருத்துரைப்பு மட்டும்தன். அந்தக் கருத்தை ஜனாதிபதி கவனத்தில் எடுக்கலாம். விரும்பினால் கவனத்தில் எடுக்காமல் தன்பாட்டில் நிராகரித்து விட்டு, தான் பரிந்துரைத்தவர்களையே அப்பதவிக்கு – அல்லது பதவிகளுக்கு – நியமிக்கலாம். அதுதான் சட்ட ஏற்பாடு.

முன்னர் 19ஆவது திருத்தத்தின் கீழ் ‘அரசமைப்புக் கவுன்ஸில்’ என்ற கட்டமைப்பு இருந்தது. மனித உரிமைகள் ஆணைக்குழு, சுயாதீன தேர்தல் ஆணைக்குழு, பொதுச்சேவை ஆணைக்குழு, சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு போன்ற சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவுவதும், உயர்பதவிகளுக்கு உரியவர்களை நியமிப்பதும் ஏறத்தாழ ஒரு சுயாதீன – சுதந்திர – அமைப்பாக இருந்த அரசமைப்புக் கவுன்ஸிலிடம் வழங்கப்பட்டிருந்தது.

கோட்டாபய அரசு ஆட்சிப் பீடம் ஏறியதும், நாடாளுமன்றத்தில் தனக்கு இருந்த மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பயன்படுத்தி, இருபதாவது அரசமைப்புத் திருத்தம் மூலம் மேற்படி சுயாதீன அமைப்புகளைச் செயலிழக்கச் செய்தது. அந்த அதிகாரங்கள் எல்லாம் மீளவும் ஜனாதிபதியின் கைகளுக்கு வந்து விட்டன. சுயாதீன ஆட்சி நிர்வாக ஒழுங்கு, இதன் மூலம் குழம்பி விட்டது.

இப்போது மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு உறுப்பினர்களை நியமிப்பது உட்பட்ட அதிகாரம் முழுமையாக ஜனாதிபதியின் கைகளில். அதனால் அந்த ஆணைக்குழுக்களும் தமது தனித்துவத்தை இழந்து விட்டன.

ஆளுநர் பதவிகளுக்கும், தமக்குக் கீழ் இயங்கும் பல்வேறு ஜனாதிபதி செயலணிகளுக்கும் கோட்டாபய ராஜபக்ஷ செய்யும் நியமனங்களைப் பார்க்கும் போது நீதி, நியாயமான, பக்கச் சார்பற்ற, நடுநிலையான போக்குடையவர்கள் இந்தப் பதவிகளுக்குப் பரிசீலிக்கப்படுவதேயில்லை என்றே தோன்றுகின்றது.

‘ஒரே நாடு; ஒரே சட்டம்’ என்ற தமது சர்ச்சைக்குரிய கோட்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டங்களைத் தயாரிக்கும் செயலணிக்கு பெரிதும் சர்ச்சைக்குரிய – பேரினவாதப் போக்குடைய – வண. ஞானசார தேரரை நியமித்தமையில் இருந்தே இந்நியமனங்களில் ஜனாதிபதி கோட்டாபயவின் போக்கு எத்தகையது என்பது தெளிவு.

அவரின் நிர்வாகத்தில் நீதி முறைமை எந்தச் சீத்துவத்தில் இருக்கின்றது என்பதை அவரது நியமனங்கள் மற்றும் அவர் அமைத்த ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் ஆணையாளர்களின் தகைமைகள், திறமைகள் மூலம் நாம் அறிந்து கொள்ள முடியும்.

மனித உரிமைகள் ஆணைக்குழு என்பது மிக மிக முக்கியமான ஒன்று. மனித உரிமைகளைப் பேணுவதில் நீதி, நியாயத்துடன் செயற்பட்ட – மதிப்பார்ந்த – பிரமுகர்களே இப்பதவிக்கு இதுவரை காலமும் நியமிக்கப்பட்டு வந்தனர்.

ஆனால், கோட்டாபய ராஜபக்ஷவின் கீழ் அத்தகைய தகுதி, திறமை, நற்கீர்த்தி, உயர்மதிப்பு மிக்கவர் அப்பதவிக்கு நியமிக்கப்படுவார் என எதிர்பார்ப்பது பகல் கனவுதான். பார்ப்போம், அதி உத்தமர் என்ன செய்யப்போகின்றார் என்பதை.

## காணாமல் போனவர்களைக் கண்டுபிடிக்க 20 ஆவணங்கள் சமர்ப்பிக்குமாறு அறிவிப்பு!

காணாமலாக்கப்பட்டவர்களை கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அவர்களின் உறவினர்கள் 20 ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்களுக்கு தமிழில் அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே, காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பான அலுவலகம் இதனைத் தெரிவித்துள்ளது.

காணாமல்போனவர்கள் தொடர்பான அலுவலகத்துக்கான விண்ணப்பம், காணாமல் போனவரின் தேசிய அடையாள அட்டை, வாகனசாரதி அனுமதிப்பத்திரம், பிறப்பு அத்தாட்சி பத்திரம் உட்பட 20 ஆவணங்களை காணாமல்போனவர்கள் தொடர்பான அலுவலகம் கோரியுள்ளது.

காணாமல்போனவர்கள் குறித்த முறைப்பாடு கிடைத்துள்ளதை உறுதிசெய்வதாக கடிதத்தில் தெரிவித்துள்ள காணாமல்போனவர்கள் பற்றிய அலுவலகம், ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் போதுமானவையல்ல எனக் குறிப்பிட்டுள்ளது.

குறிப்பிட்ட கடிதத்தில் புள்ளியிடப்படாத ஆவணங்களைக் கோரியுள்ள அலுவலகம், அவற்றை மாத்திரம் அனுப்புமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.



கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு முன்பாக விபத்தில் மரணம் அடைந்த சிறுமியின் குடும்பத்தாருக்கு சமூக செயற்பாட்டாளரும் சாவகச்சேரி லவ்லி கிறீம் ஹவுஸ் உரிமையாளருமான கலாநிதி அகிலன் முத்துக் குமார சாமியால் சைக்கிள் ஒன்று வழங்கி வைக்கப்பட்டது.

## கொழும்பு - கண்டி ரயில் சேவை இன்று முதல் மீண்டும் ஆரம்பம்



சீரற்ற காலநிலை காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த கொழும்பு - கண்டி ரயில் சேவை இன்று (திங்கட்கிழமை) முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என இலங்கை ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

ரம்புக்கனை - பலான ரயில் நிலையம் வரை தண்டவாளம் சேதமடைந்துள்ளதால் ரயில் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், தண்டவாளத்தை சீரமைக்கும் பணிகள் நிறைவடையும் தறுவாயில் உள்ளன எனவும் ரயில்வே பொது முகாமையாளர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கையில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோக வலையமைப்பு

### இந்தியாவில் 7 பேர் கைது

இலங்கை உட்பட பல நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வந்த சர்வதேச இணையம் மூலமான சிறுவர் பாலியல் துஷ்பிரயோக வலையமைப்பு தொடர்பில், இந்தியாவின் மத்திய புலனாய்வுப் பிரிவு (சி.பி.ஐ) ஏழு பேரைக் கைது செய்துள்ளது.

13 மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்தில் வைத்து அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

100 நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் 5 ஆயிரம் பேரை உள்ளடக்கியதாகக் கூறப்படும் சிறுவர் பாலியல் துஷ்பிரயோக செயற்பாடு கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து அவர்கள் கைது செய்யப்பட்டனர் என சிபிஐ தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான், அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, நைஜீரியா, கானா, பங்களாதேஷ், இலங்கை, அஜர்பைஜான், எகிப்து, ஏமன், மலேசியா மற்றும் இந்தோனேசியா போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள் இதில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த வலையமைப்பில் மேற் கொள்ளப்பட்ட தேடுதலின் போது பாகிஸ்தானில் 36, கனடா மற்றும் இங்கிலாந்தில் 35, பங்களாதேஷில் 31, இலங்கையில் 30, நைஜீரியாவில் 28, அஜர்பைஜானில் 27, ஏமனில் 24 மற்றும் மலேசியாவில் 22 என்ற எண்ணிக்கையில் தொலைபேசி எண்கள் கண்டறியப்பட்டுள்ளன என சிபிஐ தெரி வித்துள்ளது.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2021



“இந்த உலகித்தில் அழகானது எதுவுமே இல்லை என்று ஒருபோதும் சொல்லாதீர்கள். எப்போதும் உங்களை ஆச்சரியப்படுத்தும் அளவுக்கு ஒரு மரத்தின் தோற்றத்தில், ஓர் இலையின் அசைவில் ஏதோ வொன்று இருக்கும்”

அல்பேட் சுவைற்சர்
(பிரான்ஸ் தத்துவவியலாளர் - சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் )

காலைக்கதிர் Kalaikkathir

# நல்லாட்சி அரசில் சிகரெட் விலை 90 வீத எகிறல் இந்த அரசுக்கு கம்பனிகளுடன் மறைமுகதொடர்பு

## சபையில் எதிர்க்கட்சி சுட்டிக்காட்டு

'பேப்பச்சுசல் டெசினின்' 8 ஆயிரத்து 500 கோடி ரூபாவை இந்த பாதீட்டின் ஊடாக, அரச நிதிக்குள் கொண்டு வந்த மைக்கு நல்லாட்சி அரசாங்கமே காரணம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மஹேந்திரனை இலங்கைக்கு அழைத்து வர முடியாது போனாலும், பேப்பச்சுவல் ரெசினின் 12 ஆயிரம் கோடி ரூபாவை மத்திய வங்கி தம்வசம் வைத்திருந்தது.

இதில் 8 ஆயிரத்து 500 கோடியையே அரசாங்கம் கொண்டு வந்துள்ளது.

எனவே அரசாங்கத்துக்கு இந்த விடயத்தில் எவ்வித நட்டமும் ஏற்பட வில்லை என்று ராஜித சேனாரட்ண தெரிவித்தார்.

எனினும் இதன் மூலம் அரசாங்கம், 3 ஆயிரத்து 500 கோடி ரூபாவை, அர்ஜுன் அலோசியஸுக்கு வழங்கி யுள்ளதாக ராஜித சேனாரத்ன தெரி வித்தார்.

இதற்கிடையில் பாதீட்டின் ஊடாக சிகரட்டின் விலை 5 ரூபாவால் மாத்திரமே உயர்த்தப்பட்டுள்ளது.

எனினும் நல்லாட்சி அரசாங்க காலத்தில் சிகரெட்டின் விலை 90 வீதத்தால் உயர்த்தப்பட்டதாக சேனாரத்ன சுட்டிக் காட்டினார். இது குறித்த நிறுவனங் களுடன் அரசாங்கத்துக்கு இருக்கும் நட்பு காரணமாக இருக்கலாம் என்று அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், கடந்த செப்ரெம்பர் 15ஆம் திகதி வரை 1500 ரில்லியன் ரூபாவை அச்சிட்டுள்ளார்.

இதன் காரணமாக நாட்டில் பண வீக்கம் பாரியளவில் அதிகரித்துள்ளது என்றும் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இன்று இலங்கையின் வங்கிகளின் ஊடாக விநியோகிக்கப்படும் கடன் அட்டைகளை, வெளிநாட்டு இறக்குமதி பொருள்களின் விநியோகஸ்தர்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர்.

சர்வதேச வங்கிகளின் ஊடாக வங் கிக்கடன் அட்டைகளை விநியோகிக்கு மாறு அந்த விநியோகஸ்தர்கள் வலியுறுத்துகின்றனர்.

அவ்வாறு செய்யும் போது ,அந்த சர்வதேச வங்கிகளுக்கு இறக்குமதி யாளர்களால் 5 வீத கட்டணங்களை செலுத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று ராஜித சேனாரத்ன குறிப்பிட்டார்.

# அச்சுறுத்தப்பட்ட முஸ்லிம்களை காப்பாற்றியவர் மஹிந்த ராஜபக்ஷ



## அலிசப்ரி புகழாரம்

இந்த நாட்டு முஸ்லிம்களை அன்று புலிகளின் பயங்கரவாத அச்சுறுத்தலிலிருந்து காப்பாற் றியவர் தான் இன்றைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ என நீதி அமைச்சர்அலிசப்ரிதெரிவித்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வின் 76 ஆவது பிறந்த தினத் தையொட்டி அவருக்கு நல்லாசி வேண்டி கொள்ளுப்பிட்டி ஜும்ஆ பள்ளிவாசலில் விசேட து ஆப் பிரார்த்தனை நடைபெற்றது.

புத்த சாசன அமைச்சின் வழிகாட்டலில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இதனை ஏற்பாடு செய்திருந்தது. இதில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடோம் இராமேஸ்வரம் மீனவர்கள் உறுதி!

எல்லை தாண்டி இலங்கை கடற்பரப்பிற்குள் மீன் பிடிக்கும் மீனவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என இராமேஸ்வரம் மீன்வளத்துறை எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில், சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடமாட்டோம் என ராமேஸ்வரம் மீனவர்கள் உறுதி அளித்துள்ளனர்.

மீனவர்களிடையே ஏற்படும் பிரச்சினைகளைத் தடுக்கும் வகையில் இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகம் அருகே உள்ள மீன்பிடி அனுமதிச் சீட்டு வழங்கும் அலுவலகத்தில் மீனவர்கள் மற் றும் மீன்வளத் துறையினர், மெரைன் பொலிஸார் உள்ளிட்ட அதிகாரிகள் மட்டத்திலான ஆலோச னைக் கூட்டம் ஒன்று நடைபெற்றிருந்தது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட அதி காரிகள் எல்லை தாண்டி மீன் பிடிக்கும் மீனவர் கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், தடை செய்யப்பட்ட மீன்பிடி முறையைப் பயன்படுத்தி மீன் பிடிக்கும் மீன்பிடி படகுகள் பறிமுதல் செய்யப்படும் எனவும் எச்சரித்தனர்.

அத்துடன் கடற்கரையிலிருந்து 5 நாட்டிகலுக் குள் கரையோரம் மீன் பிடிக்கும் விசைப்படகுகள் மீது வழக்குப்பதிவு செய்யப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர். இதையடுத்து கூட்டத்தில் கலந்து கொண்ட மீனவ சங்கத் தலைவர்கள் மற்றும் விசைப்படகு உரிமையாளர்கள் அரசால் தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகளைப் பயன்படுத்தி மீனவர்கள் மீன் பிடிக்க மாட்டோம் எனவும், அப்படி சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கலாம் எனவும் உறுதியளித்தனர்.

மேலும், இலங்கை இந்திய மீனவர்கள் பிரச்சினையைத் தீர்க்க இலங்கை அரசுடன் இந்தி ய அரசு உடனடியாகப் பேசி நடுக்கடலில் பிரச்சினையின்றி மீனவர்கள் மீன் பிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இராமேஸ்வரம் துறைமுகம் மிகவும் பழைமையான துறைமுகம் என்பதால் சேதமடைந்துள்ளது.

இதனால் பேரிடர் காலங்களில் மீனவர்கள் படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்த முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே தூண்டில் வளைவுகளுடன் கூடிய புதிய மீன்பிடி துறைமுகம் அமைத்துத் தர வேண்டும் என மீனவர்கள் அரசுக்குக் கோரிக்கை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வீதியில் குப்பைகளை வீசிச் சென்றவர்கள் சி.சி.ரி.வி பதிவால் வசமாக மாட்டினார்கள்

## அள்ளுவித்தனர் பொலிஸார்

யாழ்.தொல்புரம் பகுதியில் பொதுமக்கள்பாவனையிலுள்ள வீதியில் குப்பைகளை வீசி சென்றவர் சீ.சி.ரீ.வி கமெராவில் சிக்கியதால் கொட்டிய குப்பை களை அவரையே பொலிஸார் அள்ள வைத்தனர்.

உழவு இயந்திரத்தில் தன் னுடைய வீட்டு குப்பைகளை ஏற்றிவந்த குறித்த நபர் மக்கள் பாவனையிலுள்ள வீதிகளில் பொறுப்பற்ற விதமாக வீசிய வாறு சென்றுள்ளார்.

இது தொடர்பாக ஆராய்ந்த அப்பகுதி பிரதேச சபை உறுப் பினர், அப்பகுதியில் உள்ள வீடுகளில் பொருத்தப்பட்டிருந்த சீ.சி.ரீ.வி கமெராக்களை ஆராய்ந்துள்ளார்.

இதன்போது வேண்டு மென்றே குப்பைகளை வீசி சென்றமை கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் அதனை ஆதாரமாக கொண்டு வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு வழங்கப்பட்டது.

முறைப்பாட்டின் அடிப்படை யில் குப்பைகளை வீசி சென்ற நபரை அடையாளம் கண்ட பொலிஸார் அந்த நபரை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து அவரைக் கண்டித் துள்ளனர்.

மேலும் கொட்டிய குப்பை களை அகற்றவேண்டும் எனக் கூறியுள்ளனர். இதனையடுத்து குப்பையை வீசிய நபரும், குப்பைக்கு சொந்தக்காரரான கடை உரிமையாளர் ஒருவரும் பொதுமக்கள் முன்னிலையில் குப்பைகளை அள்ளி அகற்றி னர்.

# உள்ளூராட்சி மன்ற விவாதப் போட்டியில் மானிப்பாய் பிரதேசசபை முதலாம் இடம்!

இலங்கையிலுள்ள உள்ளூராட்சி மன்றங் களுக்கு இடையிலான தமிழ் மொழி மூலமான விவாத போட்டியில் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தை வலிகாமம் தென்மேற்கு - மானிப்பாய் பிரதேச சபையின் விவாத அணி பெற்றுக்கொண்டுள்ளது. இரண்டாமிடத்தை மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேசசபை பெற்றதுடன் மூன்றாமிடத்தை புதுக்குடியிருப்பு பிரதேசபை பெற்றுக்கொண்டது.

முதலாமிடத்தை பெற்றுக்கொண்ட மானிப்பாய் பிரதேசசபையின் விவாதகுழுவில் தவிசாளர் அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன் உறுப்பினர்களான அருட்குமார் ஜோன் ஜிப்பிரிக்கோ, கந்தையா ஜெசிதன், லோகப்பிர காசம் ரமணன் , சிவசண்முகநாதன் அனுசன் உள்ளிட்டவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

அணியின் தலைவராக உறுப்பினர் கந்தையா ஜெசிதன் செயற்பட்டிருந்தார்.

# அஸாத் சாலி விடுதலை 2 ஆம் திகதி உத்தரவு

மேல் மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் அஸாத் சாலிக்கு எதிராக சட்டமா அதிபரால் தாக்கல் செய் யப்பட்டுள்ள வழக்கின் மனுதாரர் தரப்பு சாட்சி விசாரணைகள் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நிறைவு செய்யப் பட்டிருந்தன.

பிரதிவாதி தரப்பு சாட்சி விசாரணை இன்றி, பிரதிவாதியை விடுதலை செய்யுமாறு அஸாத் சாலி சார்பில் ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன கோரிக்கை விடுத்துள்ளார்.

பிரதிவாதி தரப்பு சாட்சி விசாரணை இன்றி, பிரதிவாதியை விடுதலை செய்வதா, இல்லையா என்பது தொடர்பில் எதிர்வரும் 2 ஆம் திகதி உத்தரவிட கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா தீர்மானித் துள்ளார்.

தாம் உள்ளிட்ட முஸ்லிம் மக்கள் அனைவரும் குர்ஆனில் கூறப்பட் டுள்ள சட்டங்களை மாத்திரமே ஏற்றுக் கொள்வதாகவும், நாட்டில் அமுல் படுத்தப்படும் சட்டங்கள் தொடர்பில் பொருட்படுத்துவதில்லை எனவும் ஊடகவியலாளர் சந்திப்பின்போது கடந்த மார்ச் மாதம் 9 ஆம் திகதி அஸாத் சாலி பகிரங்கமாகத் தெரிவித்தி ருந்தார். இதற்கமைவாக பயங்கர வாதத் தடைச் சட்டம் மற்றும் சிவில், அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேசசமவாயசட்டம் ஆகியவற்றின் கீழ் குற்றமிழைத்துள்ளார் என்று குறிப்பிட்டு சட்டமா அதிபரால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முத்துராஜவல பிரதேசத்தை அரசாங்கம் கொரிய நிறுவனத்துக்கு விற்பதற்கு முயற்சி

## தடுக்கப்போவதாக மக்கள் சக்தி எச்சரிக்கை

பாதுகாக்கப்பட்ட முத்துராஜவல பிரதேசத்தை அபிவிருத்தி செய்யப்போவதாக அரசாங்கம் வர்த்தமானியை வெளியிட்டுள்ள நிலையில் அதில் 500 ஏக்கரை, கொரியாவின் நிறுவனம் ஒன்றுக்கு விற்பனை செய்ய முயற்சிக்கப்படுவதாக மக்கள் சக்தி அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுவதன் மூலம் மீனவக் குடும்பங்கள், அங்கிருந்து வெளியேறவேண்டிய நிலை ஏற்படும் என்று மக்கள் சக்தி அமைப்பு ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் இந்த நாட்டின் பொறுப்பாளர் மாத்திரமே. சொந்தக்காரர் அல்லர் என்று இந்த செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற மக்கள் சக்தியின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். நாட்டின் டொலர் பற்றாக்குறையைத் தவிர்க்கவே இந்த முயற்சி மேற்கொள்ளப்படுவதாக அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்த சொத்தை 600 கோடி டொலர்களுக்கு விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக அதனை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு அதிகாரம் அளிக்க முயற்சிக்கப்படுவதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

எனவே இந்த வர்த்தமானியை ரத்துச்செய்யவேண்டும் என்று மக்கள் சக்தியின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பிரதேசம் விற்பனை செய்யப்படுமானால், முழு கொழும்பும் பாதிக்கப்படும் என்றும் அவர்கள் எச்சரிக்கை விடுத்தனர்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 199

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**506. இலங்கை பன்முகத் தன்மை கொண்ட நாடாக வளர்ந்ததா?**

பன்முகத்தன்மை கொண்ட நாட்டில் நீதியான நல்ல ஆட்சி அமையவேண்டுமானால் அங்கு வாழும் எல்லா இனத்தவர்களும் மதத்தவரும் சமமான உரிமைகளை அனுபவித்து, பாகுபாடற்ற போக்குகளிலிருந்தும் விரோத மனப்பான்மை கொண்ட சட்டங்களிலிருந்தும் பாதுகாக்கப்பட வேண்டும். இதற்கான முழு ஆதரங்


அகலகட சிறிசுமண தேரர்

களாக இலங்கையின் சுதந்திர அரசமைப்பில் சரத்து 29 அமைந்து, ஒரு பாகுபாடற்ற சமூகம் அமைய வேண்டும் என்று பணித்தது. ஆனால் அரசு அந்த நல்லாட்சியில் இருந்து விலகி, நாட்டின் தேசியம் என்ற போர்வையில் சிங்கள, பௌத்த பெரும்பான்மையை நிறுவுவதற்காக பௌத்தமத குருமாரை அரச அலுவல்கள் எல்லாவற்றிலும் தலையிட அனுமதித்தது. இந்தப் போக்கு பண்டாரநாயக்காவின் உயிருக்கு உலை வைத்தது. இந்தப் போக்கை தடுத்து நிறுத்தி, சட்டம், ஒழுங்கை ஒரு பாகுபாடற்ற சமூகமாக அனுபவிப்பதற்காகவே புரட்சியை மேற்கொள்ளத் திட்டமிட்டனர் எனக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் வாதித்தார்கள்.

நாட்டில் வீறுகொண்டு எழுந்து நின்ற சிங்கள, பௌத்தத்தின் குரலில் இவர்கள் காலனி ஆதிக்கக்காரரின் கால் வருடிகள் என்றே கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

1972 இல் ஸ்ரீமாவோ இடதுசாரி கட்சிகளினது ஆதரவோடு புதிய குடியரசு சட்டத்தை உருவாக்கிய உத்தியில் அதுவரை மீள ஆராயப்படாமல் கிடப்பில் விடப்பட்டிருந்த தனிச்சிங்கள சட்டம், சோல்பரி அமைப்பின் 29 ஆவது சரத்துக்கு அமைவானதா என்ற வாதம் சுழியோடப்பட்டு, தனிச்சிங்கள சட்டம் புதிய குடியரசு சட்டத்தின் அங்கமானது. அது மட்டுமல்ல Privy Council முறையும் ஒழிக்கப்பட்டு பௌத்தம் முன்னுரிமை மதமானது. இவற்றின் துர்பாக்கியம் எதுவென்றால் அதுவரையும் "ஒரு மொழி என்றால் இரு நாடுகள்; இரு மொழிகள் என்றால் ஒரு நாடு" என்று அறிவுரைகள் தந்த சமசமாஜ கட்சியின் முக்கிய தலைவர் சட்டத்தரணி கொல்வின் ஆர் டி சில்வா தான் அவற்றை ஆக்கும் பொறுப்புக்களை ஏற்றிருந்தார்.

ரொய்ஸ் டி மெல்லின் வழக்கும், அதன் போக்கும், அதை சுற்றி எழுப்பப்பட்ட கருத்தாக்கங்களும் தமிழ் மக்களின் தலைவர்கள் வட கிழக்கிலிருந்தே நாடாளுமன்றத் தேர்தல்களில் வெல்வதில் குறியாயிருந்ததும், பரந்தளவிலான இடதுசாரிச் சிந்தனையில் பெரும்பான்மை மக்களைத் திசை திருப்ப முடியாது, அவர்களது நீரோட்டத்தில் ஒடுவது தான் தங்களுக்கும் ஏற்றது எனத் தீர்மானங்கள் எடுத்து அரசுடன் சேர்ந்து இயங்கியதுதான். இவற்றினால் தமிழ் மக்கள் தென்பகுதியில் தமக்கு இருந்த ஒரு மிதவாத இடதுசாரி ஆதரவுத்தனத்தையும் இழந்தனர்.

தொடர்ந்து இந்த இன ஒடுக்கலுக்காக குடியரசு சட்டங்களில் பௌத்தத்தின் முன்னுரிமை முக்கியப்படுத்தப்பட்டது மட்டுமல்லாமல் அதனைப் பாதுகாப்பது அரசின் கடமை என்ற கௌரவங்கள் தரப்பட்டன. ஒற்றை ஆட்சி மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டது. அதிகாரம் யாவும் ஒருவர் கையிலே பலப்படுத்தப்பட்டால் அது ஒற்றையாட்சியை வலுப்படுத்துமென்ற ஜே.ஆரின் சித்தாந்தத்தால் 1978 குடியரசு சட்டம் நடைமுறை ஜனாதிபதிக்கான அதிகாரங்களோடு ஜே.ஆரின் கையில் பாரப்படுத்தப்பட்டது.


பின்னர் பதவிக்கு வந்த மஹிந்த ராஜபக்ஷ தான் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பேன் என்று சுபதங்கள் செய்தாலும், அந்த அதிகாரங்கள் நாட்டை ஒற்றுமைப்படுத்த அவசியமானவை எனக் கூறி முழுக்காலமும் அதிலே அரசாட்சி செய்தார். அவர் பேசிய 'ஒற்றுமை' இனங்களுக்கான ஒற்றுமையல்ல, அது நாட்டை ஒருமைப்படுத்த அந்த அதிகாரங்கள் வேண்டும் என்பது.

பின்னர் நல்லாட்சி காலத்தில் மைத்திரியின் அதிகாரங்கள் பல குறைக்கப்பட்டு அவை நாடாளுமன்றத்துக்குப் பாராப்படுத்தப்பட்டாலும் பழையபடி 20 ஆம் திருத்தச் சட்டத்தால் இவை எல்லாம் மேலும் கூடிய அதிகாரங்களுடன் "சிங்கள பௌத்த" தேசத்தை - நாட்டை - உறுதியாக நிலைநாட்ட தற்போதைய ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டிருக்கின்றன.

**507. அரசமைப்புச் சட்டங்களின் வரலாறுகளை ஏன் முன்னிலைப்படுத்துகின்றீர்கள்?**

நல்லாட்சி காலத்திலிருந்து தமிழர்களது அபிலாஷைகளை உள்ளடக்கிய அதிகாரப்பரவல் கொண்ட புதிய அரசமைப்புச் சட்டம் ஒன்று உருவாக்கப்படும் எனச் சொல்லப்பட்டாலும் அப்படியான சட்டம் வெளிவரவில்லை. கருத்திலேயே அடிபட்டு போனதோ அல்லது குறைப்பிரசவமானதோ தெரியவில்லை.

அது முடிந்ததும், புதிய ஜனாதிபதி தான் ஒரு புதிய அரசமைப்புச் சட்டத்தை


ஜே.ஆர்.ஜெயவர்தனா


கொல்வின்

உருவாக்குவேன் என அறிவித்து அதற்கு சமர்ப்பணங்கள் கோரினார். தமிழ் அரசியல் பரப்பின் எல்லாப் பகுதியினரும் அரசமைப்புச் சட்டம் எப்படியாக இருக்க வேண்டும் என சமர்ப்பணங்களை வைத்திருக்கின்றார்கள். அவை பற்றி அபிப்பிராயங்கள் தரப்பட்டிருக்கின்றன. அதன் நகல் வெளிவருமுன்னே 'ஒரு நாடு; ஒரு சட்டம்' என நாடறிந்த பௌத்த குருவை தலைவராக்கி உலாவ விட்டிருக்கிறார். அப்படியானால் உருவாகும் புதிய


மஹிந்த

அரசமைப்புச் சட்டம் இன்று சிங்கள, பௌத்தம் தனது பேரினவாதத்தின் முழு முனைப்பையும் இனப் படுகொலையில் அழிப்பில் ஒடுக்கத்தில் மூர்க்கமாக காட்டும்போது அது எந்த வடிவத்தில் வரும்?

அதனை ஊக்கக் கைகளில் இருந்த சங்குகளை எப்படி ஊதினார்கள், எந்தத் தருணங்களில் ஊதினார்கள், இந்தப் புதிய அரசமைப்புச் சட்டம் தமிழ் தேசியத்தின் கடைசி சங்காக அமையுமா என எழுந்த கேள்வி ஆகியவற்றைப் பார்க்க வேண்டும்.

கலிங்கத்தில் நின்று சாம்ராட் அசோக சக்கரவர்த்தியின் மனதில் சாந்த போதனைகளை ஊட்டிய புத்தர் போல். போர் வெற்றிகளை நினைவு கூரும் வகையில் நினைவுச் சின்னங்கள் அமைக்கப்படக்கூடாது என மதிக்கப்படும் பேராசிரியர் வண அகலகட சிறிசுமண தேரர் தெரிவிக்கிறார். யுத்த வெற்றியின் காணிக்கையாக அனுராதபுரத்தில் அமைக்கப்பட்ட "சந்தஹிரு சேயா" தூபி நிர்மாணிப்பு பற்றி அவர் கருத்து தெரிவிக்கும்போது இப்படி கூறினார். இந்தத் தூபி ஜனாதிபதியின் முன்னெடுப்பில் தாய் நாட்டின் ஒற்றுமைக்காக பெரும் தியாகங்களைச் செய்த இராணுவ வீரர்களை நினைவு கூரும் வகையிலும் முப்பது வருடகால யுத்தத்தின் முடிவை குறிக்கும் முகமாகவும் நிறுவப்பட்டது. இந்த தேரர் அறிவுறுத்துவது செவிடன் காதில் சங்காகத்தான் அமையும் என்ற தீர்மானம் முந்தியிருப்பதாகவே தோன்றுகிறது.

அசோக சக்கரவர்த்தி புத்தரின் போதனைகளை ஏற்று, யுத்தத்தின் பலாபலன்களை உணர்ந்து, அதற்கு மாறாக அவரின் போதனைகளை உலகெங்கும் பரப்பத் தன் தூதுவர்களை அனுப்பினார். இங்கோ யுத்த வெற்றியை உறுதிப்படுத்தி, அதில் பாதிப்படைந்தவர்களின் பெரும்பகுதி தமிழ் மக்கள் என உணர்ந்தும், அவர்களது மனவலியை பொருட்படுத்தாமல் வெற்றிச் சின்னம் அமைக்கும் மனோபாவம் உள்ளவரிடம் பேச்சு வார்த்தைகளால் உள்ளக சுயநிர்ணயம் அல்ல ஒரு தீர்வு தன்னும் பெற முடியுமா என்ற கேள்விகள் எழுகின்றன.

ஆகவே தமிழ் மக்களின் நினைவு கூரல்கள் சட்டத்தாலும் அடாத்தாகவும் இடித்து அழித்தொழிக்கப்படும் நிலையில், இப்படியான அரசமைப்புச் சட்டம் இயேசுவிற்கு அறையப்பட்ட கடைசி ஆணிபோல தேசியத்தின் கடைசி சங்காக அமைய வேண்டும் என்ற தீர்மானம் முந்தியிருப்பதாகவே தெரிகிறது. வாழ்வுச்சுமைகளால், வயிற்றுப்பட்டினிகளால் தென்பகுதிமக்கள் அரசாங்கத்துக்கு எதிராக போராட்டங்களில் வீதிக்கு வருவதை அவதானிக்கிறோம். அது அரசமாற்றத்துக்கு எதிர்கட்சிகளின் முனைப்பாக இருந்தாலும், அதில் எந்த ஒரு போராட்டத்திலும் "ஒரே நாடு; ஒரே சட்டம்" தவறானது, அது நீக்கப்பட வேண்டும் என்றோ அல்லது "தமிழ் மக்களுக்கு போரில் இழைக்கப்பட்ட அட்டூழியங்கள் நிவர்த்தி செய்யப்பட்டு அவர்களும் சமத்துவத்துடன் உள்


கோட்டாபய

வாங்கப்பட்டு சுபீட்சப் பாதை அமைக்கப்பட வேண்டும்" என்ற பதாகைகளோ, கோஷங்களோ இல்லை. எந்த கட்சித் தலைவரோ அது போன்ற அறிவிப்பை தந்ததில்லை. ஆகவே தமிழ்மக்கள் தாங்கள், ஓர் ஒற்றுமையான சிங்கள - பௌத்த 'ஒரு நாடு;ஒரு தேசம்' என்ற கட்டமைப்புடனே மோதுகிறார்கள், ஆகவே அதற்காக தங்களுக்கு கிடைக்கக் கூடிய ஆதரவு தளங்களை பார்க்க வேண்டும் என்பதை மனதில் நிறுத்த வேண்டும்.

(வளரும்)

# தமிழீழத் தேசியக்கொடி நாள் நிகழ்வுகள் புலம்பெயர் நாடுகளில் அனுஷ்டிக்கப்படுகிறது

## நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் அறிவிப்பு

உலகளாவிய ரீதியில் தமிழீழத் தேசியக்கொடி நாள் நிகழ்வுகளை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் அறிவித்துள்ளது.


அதன்படி, நவம்பர் 21ஆம் திகதியானநேற்று (ஞாயிற்றுக்கிழமை) தமிழீழத் தேசியக்கொடி நாள் நிகழ்வுகள் புலம்பெயர் நாடுகளெங்கும் இடம்பெற்றன என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்நாளினையொட்டி பல்வேறு நிகழ்வுகள் புலம்பெயர் நாடுகள் எங்கும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தாலும் பொது அமைப்புக்களாலும் நடத்தப்பட்டன.

அதன்படி, ஐரோப்பிய நேரம் மதியம் 12 மணி முதல் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் வலைக்காட்சி வழியே அனைத்து நாடுகளது நிகழ்வுகளையும் நேரலையாக ஒளிபரப்பப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பயன்படுத்தி வந்த கொடியில் இருந்த எழுத்துக்கள் நீக்கப்பட்ட கொடி, தமிழீழத்தின் தேசியக் கொடியாக மாவீரர் எழுச்சி வாரத்தின் தொடக்க நாளான நவம்பர் 21ஆம் நாளன்று (1990) பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது.

அந்நாளையே தமிழீழத் தேசியக் கொடி நாளாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# திருமணம் செய்வோர் எண்ணிக்கை வீழ்ச்சி

திருமணம் செய்து கொள்வோரின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளி விவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2019ஆம் ஆண்டில் ஒரு லட்சத்து 63 ஆயிரத்து 378 பதிவுத் திருமணங்கள் நடைபெற்றன எனவும், 2020 ஆம் ஆண்டில் ஒரு லட்சத்து 43 ஆயிரத்து 61ஆகக் குறைந்துள்ளதாகவும் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, அதிகளவாக 14 ஆயிரத்து 617 திருமண பதிவுகள் கம்பஹா மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளன.

இதற்கமைய, திருமணம் மற்றும் அத்தியாவசியமான விழாக்கள், ஒன்றுகூடல்கள் போன்றவற்றுக்கு மிக குறைந்தளவிலான மக்களை ஒன்று திரட்டுமாறு சுகாதார அமைச்சு முக்கிய அறிவிப்பொன்றை பொதுமக்களுக்கு விடுத்துள்ளது.

ஏற்கனவே கடந்த 16ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பொதுமக்கள் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார வழிகாட்டல்களும் வெளியிடப்பட்டுள்ளன.

# மட்டக்களப்பில் மாவீரர் நினைவேந்தலுக்கு சாணக்கியன் உள்ளிட்டவர்களுக்கும் தடை

மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த மட்டக்களப்பில் ஏழு பேருக்கு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

கொக்கட்டிச்சோலை பொலிஸாரால் மட்டக்களப்பு நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரா. சாணக்கியன், கோ.கருணாகரம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் த.சுரேஷ், முன்னாள் போராளிகள் நடராசா சுரேஸ், தம்பித்துரை கஜேந்திரன், பட்டிப்பளை பிரதேச சபை தவிசாளர் சீ.புஷ்பலிங்கம் ஆகியோருக்கே இவ்வாறு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக குறித்த நபர்கள் 20 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதிவரை நினைவேந்தல் நிகழ்வுகளில் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

# காமினியை மீண்டும் அழைக்கிறது சி.ஐ.டி.

இணையத்தள சந்திப்பு ஒன்றில் நடத்தப்பட்ட கலந்துரையாடலொன்றின் போது அரச புலனாய்வுத் திணைக்கள பணிப்பாளர் சுரேஷ் சாலே குறித்து, அருட்தந்தை சிறில் காமினி அடிகளாரால் தெரிவிக்கப்பட்ட கருத்து தொடர்பில் விசாரிப்பதற்காக இரு தினங்கள் வாக்கு மூலம் அளிப்பதற்காக அருட்தந்தை சிறில் காமினி சி.ஐ.டிக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இந் நிலையில் மூன்றாவது நாளாக வாக்கு மூலம் அளிப்பதற்காக இன்று காலை 9.30 மணிக்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு வருமாறு சி.ஐ.டி.யினர் அருட்தந்தை சிறில் காமினி அடிகளார்க்கு அழைப்பு விடுத்துள்ளனர்.


கடந்த இரு தினங்களில் மொத்தமாக 16 மணித்தியாலங்கள் அருட்தந்தை சிறில் காமினி சி.ஐ.டி.யினருக்கு வாக்கு மூலம் அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மக்கள் மத்தியில் தவறான அபிப்பிராயத்தைத் தோற்றுவிக்கும் என்ற காரணத்தால், பிறிதொரு தினத்தன்று வருதாக கூறியிருந்த நிலையில் இதனை ஏற்றுக்கொண்ட சி.ஐ.டியினர் இன்று வருமாறு அருட்தந்தை சிறில் காமி னிக்கு அழைப்பு விடுத்திருந்த நிலையிலேயே அவர் சி.ஐ.டிக்கு செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கண்டி அதிவேக நெடுஞ்சாலை மக்கள் பாவனைக்குத் திறப்பு


கண்டி அதிவேக நெடுஞ்சாலையின் மீரிகம தொடக்கம் குருணாகல் வரையான பகுதி எதிர்வரும் 28 ஆம் திகதி மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இந்த வீதி திறந்து வைக்கப்பட வுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்த வீதியில் மீரிகம, நாகலகமுவ, தம்பொக்க, குருணாகல் மற்றும் யங்கபிட்டிய ஆகிய 5 வெளியேறும் பகுதிகள் உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அம்பாறையில் பனி மூட்டம்!



அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை கடுமையான பனி மூட்டங்கள் காணப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கல்முனை, நாவிதன்வெளி, சம்மாந்துறை, காரைதீவு, நிந்தவூர், சாய்ந்தமருது, அட்டாளைச்சேனை, ஒலுவில் போன்ற பிரதேசங்களில் இவ்வாறு பனிமூட்டமான காலநிலை நிலவுகின்றது..

இதனால் வாகன சாரதிகள் உட்பட பொதுமக்கள் சிரமங்களுடன் பயணிப்பதை அவதானிக்க முடிகிறது.

மேலும் சில இடங்களில் வாகன சாரதிகள் வெளிச்சங்களை ஒளிரச் செய்தபடி பயணிப்பதை காணக்கூடியதாக உள்ளது.

# சகல வகுப்புக்களும் இன்று முதல் ஆரம்பம்

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பாடசாலைகளிலும் 6, 7, 8 மற்றும் 9 ஆம் தரங்கள் இன்று (திங்கட்கிழமை) முதல் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் டலஸ் அலகப்பெரும தெரிவித்துள்ளார்.

அத்துடன் தற்போது தரம் ஒன்று முதல் 5 வரையிலான தரங்களும் 10 முதல் உயர்தர வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய சகல தரங்களுக்குமான கற்றல் செயற்பாடுகள் இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா பரவல் காரணமாக பாடசாலைகள் தொடர்ச்சியாக மூடப்பட்டிருந்தன.

இந்த நிலையில், கொரோனாவின் தாக்கம் சற்று குறைந்ததையடுத்து, கட்டம் கட்டமாக பாடசாலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# கொவிட்டுக்குரிய நோய் அறிகுறி காணப்படுமாயின் மாணவர்களை பாடசாலைக்கு அனுப்பவேண்டாம்



நோய் அறிகுறிகள் காணப்படுமாயின் மாணவர்களைப் பாடசாலைக்கு அனுப்ப வேண்டாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன பெற்றோர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதவிர, மாணவர் ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதியானதாக சந்தேகித்தாலோ அல்லது தொற்று உறுதி செய்யப்பட்டாலோ பாடசாலைகளில் பின்பற்ற வேண்டிய முறைமைகள் அடங்கிய சுகாதார வழிகாட்டல் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, அவ்வாறு மாணவர் ஒருவர் அடையாளம் காணப்பட்டால், அவர்களைத் தனிமைப்படுத்துவதற்கான தனி இடம் ஒன்று பாடசாலைகளில் இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், பாடசாலைகளின் நுழைவாயிலில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் உடல்நலம் குறித்துக் கண்காணிப்பது அத்தியாவசியமாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# சிங்களப் பேரினவாதிகளின் பரப்புரைக்கு அவல் கொடுத்த ஜனநாயக விரோதிகள்!

## சுமந்திரன் எம்.பியின் பேச்சைக் குழப்பியமைக்கு கனடா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டனம்

தமிழர்கள் என்றால் பயங்கரவாதிகள், பிரிவினைவாதிகள் என்ற சிங்கள - பௌத்த பேரினவாதிகளின் பரப்புரைக்கு கனடாவில் சுமந்திரன் எம்.பியின் பேச்சைக் குழப்பிய ஜனநாயக விரோதிகள் அவல் கொடுத்திருக்கின்றார்கள். இதனால் பாதிக்கப்படுபவர்கள் எங்கள் தாயக உறவுகளே.

- இவ்வாறு கனடா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் வே.தங்கவேலு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கனடா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரொறன்ரோவில் நடத்திய பொதுக் கூட்டம் சுமுகமாக நடந்தது. ஆனால், இறுதி நேரத்தில் எம்.ஏ. சுமந்திரன் பேசிக்கொண்டிருந்தபோது மண்டபத்தின் பின்புறம் நின்று கொண்டிருந்த சிலர் பேச்சைத் தொடரவிடாமல் உரத்த குரலில் கூச்சல் போடத் தொடங்கினார் கள்.

கூட்டத்தில் அரை மணித்தியாலம் பேசிய இராசமாணிக்கம் சாணக்கியன் எந்தக் குறுக்கீடும் இல்லாது பேசி முடி தார். அவருக்குப் பலத்த கைத்தட்டலும் கிடைத்தது.

அவையோர் எழுத்தில் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் அளிக்கப்படும் என்று பலமுறை சொல்லப்பட்டது. இருந்தும் அவற்றைச் செவிமடுக்காது தொடர்ந்து சுமந்திரனைப் பேசவிடாது கூட்டத்தைக் குழப்பினார்கள். இதனால் கூட்டத்தை முடிக்க வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டோம். இப்படி நடப்பது இதுவே முதல் தடவை ஆகும்.

கூட்டம் தொடங்கு முன்னர் சிலர் மண் டபத்துக்கு எதிர்ப்புறமாக புலிக்கொடியுடன் நின்றிருந்தார்கள். கனடா நாட்டில் அமைதியான முறையில் எதிர்ப்பைக் காட்ட ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமை உண்டு. கனடா ஒரு ஜனநாயக நாடு என்ற முறையில் அமைதியான முறையில் எதிர்ப்பைக் காட்ட சட்டம் அனுமதிக்கிறது.

கனேடிய தமிழ்ச் சமூகம் சட்டத்தை மதிக்கின்ற ஒரு சமூகம். இந்த நாட்டில் எல்லோருக்கும் பேச்சுரிமை மற்றும் கருத்துரிமை நூறு விழுக்காடு இருக்கின்றது. ஆனால், சட்டத்தை மதியாது சட் டத்தைக் கையில் எடுக்கும் உரிமை யாருக்கும் இல்லை. படித்தவர்களைப் பிடிக்காத ஒரு சிலரே சட்டத்தை தங்கள் கையில் எடுக்கத் துணிகின்றார்கள்.

இன்றைய பூகோள அரசியல் சூழலில் தமிழ் மக்களது உரிமைகளை ஜனநாயக வழி முறையில் - பேச்சுகள் மூலம் - அமெரிக்கா, இந்தியா போன்ற வெளி நாடுகளின் ஆதரவுடன் தான் பெறமுடியும். எங்கள் வழி வன்முறைதான் என்றால் மேற்குலக நாடுகள் முன்னர் போல் எம்மைக் கைவிட்டு விடும்.

இதைத்தான் கூட்டத்தை குழப்பியவர்கள் விரும்புகிறார்களா எனக் கேட்க விரும்புகிறோம்? அவர்களது ஜனநாயக விரோத செயலை வன்மையாகக் கண்டிக்கின்றோம். அவர்களை அவமதித்தது, அவர்களுக்கு வாக்களித்த மக்களை அவமதித்தற்கு ஒப்பானதாகும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுமந்திரன் மற்றும் சாணக்கியன் இருவரும் எமது தாயக மக்களால் ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள். அந்த மண்ணில் நின்றுகொண்டு அந்த மக்களுக்காக நாடாளுமன்றத் துக்கு உள்ளேயும் வெளியேயும் குரல் கொடுப்பவர்கள். குறிப்பாக சுமந்திரன் இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளது இராஜதந்திரிகள், தூதுவர்கள் மற்றும் அதிகாரிகளோடு சம்பந்தன் ஐயாவின் அறிவுறுத்தலுக்கு இணங்க எங்கள் மக்களது சிக்கல்கள், குறிப்பாக அரசியல் தீர்வு பற்றி தொடர்பாக தொடர்ச்சியாகப் பேசி வருபவர். அவரது அமெரிக்க வருகை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அந்த நாடு விடுத்த அழைப்பின் பேரிலேயே அவரும் ஜனாதிபதி சட்டத்தரணி கனக. ஈஸ்வரன் மற்றும் முனைவர் நிர்மலா சந்திரகாசன் வருகை தந்துள்ளார்கள்.

தமிழர்கள் என்றால் பயங்கரவாதிகள், பிரிவினைவாதிகள் என்ற சிங்கள - பௌத்த பேரினவாதிகளின் பரப் புரைக்கு இந்த ஜனநாயக விரோதிகள் இன்று அவல் கொடுத்திருக்கின்றார்கள் எனக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். இதனால் பாதிக்கப்படுபவர்கள் எங்கள் தாயக உறவுகளே - என்றுள்ளது.

# சுமந்திரன் பேசிய கூட்டம் கனடாவில் குழப்பப்பட்டது

## கும்பலாகக் கூடியோர் கூச்சல்





**ரொறன்ரோ, நவம்பர் 22**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கனடா பிரிவினர், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனை முன்நிறுத்தி ரொறன்ரோவில் நடத்திய கூட்டம் அங்கு ஒரு குழுவினர் கூச்சலிட்டுக் குழப்பியமையால் இடையில் நின்றது.**

கூட்டத்தில் பேச்சாளர்களாய் பங்கு பற்றிய யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனும், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனும் பாதுகாவலர்களின் உதவியுடன் பாதுகாப்பாக வெளியேறினர்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக் களத்துடனான பேச்சுக்காக வொஷிங்கடன் சென்றிருக்கும் சுமந்திரன் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கனடா சென்றிருந்தார். அவரையும் இரா.சாணக்கியனையும் வைத்து ஒரு பொதுக் கூட்டத்துக்கு கூட்டமைப்பின் கனடா கிளை ஏற்பாடு செய்திருந்தது. சில நூறு பேர் கூட்டத்துக்கு வருகை தந்திருந்தனர்.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னரே ஒரு குழுவினர் கூட்டம் நடைபெறும் மண்டபத்தின் முன்புறத்தில் புலிக்கொடி ஒன்றை ஏற்றியிருந்தனர்.

கூட்டம் ஆரம்பமாகி சாணக்கியன் பேசினார். அவரது உரை எந்தத் தடங்கலுமின்றி நடந்தது. அவரின் உரையின் முடிவில் பலத்த கரகோஷமும் கிட்டியது.

சுமந்திரன் பேசத் தொடங்கியபோது ஆரம்பத்தில் சில குறுக்கீடுகள், குழப்பங்கள் இருந்தன. எனினும் அவற்றை சமாளித்து சுமார் பதினைந்து நிமிட நேரம் அவர் உரையாற்றினார்.

தாயக மண் பறிபோகமல் காப்பாற்ற இடைக் காலத்துக்கேனும் ஒரு தீர்வை நாம் எட்ட வேண்டும், தாயகம் பறிபோனால் எதுவும் செய்ய முடியாது என அவர் கூறிக்கொண்டிருந்தபோது திடீரென குறுக்கீடுகள், சத்தங்கள் குழப் பங்கள் ஏற்பட்டன. சில டசின் பேர் ஆக்கிரோஷமாகச் சத்தமிட்டனர். "துரோகி சுமந்திரன் திரும்பிப் போ" என அவர்கள் கூக் குரலிட்டனர். ஒவ்வொரு கேள்விக்கும் சுமந்திரன் பதில் கூறுவார் எனத் திரும்பத் திரும்ப அறிவிக்கப்பட்டும் கூட்டத்தைக் குழப்பியோர் அடங்குபவர்களாக இருக்கவில்லை.

"எங்களுக்குத் தீர்வு வேண்டாம்; தனி ஈழம் தான் வேண்டும்", "பத்து வருடங்களாக என்ன பிடுங்கினீர்கள்?" என்றெல்லாம் சத்தங்கள் ஆக்ரோஷமாக எழுந்தன.

தொடர்ந்து பேச முடியாத நிலைமை ஏற்பட்டமையை அடுத்து சுமந்திரனும் சாணக்கியனும் கூட்டம் நடைபெற்ற மண்டபத்தை விட்டு வெளியேறினர். இடையே பொலிஸாரும், பாதுகாவலர்களும் அவர்கள் வெளியேறுவதற்கான பாதுகாப்பை வழங்கினார்.

சுமந்திரனை பேசவிடாமல் துரத்தியடித்தோம் என்று கூட்டத்தைக் குழப்பியவர்கள் மகிழ்ச்சியுடன் புறப்பட்டனர்.

'கனடாவில் சுமந்திரனை பேசவிடாது துரத்தியடித்த தமிழர்கள்' - என்ற சாரப்பட சமூக ஊடகங்களில் பெருமளவிலான பதிவுகள் பகிரப்பட்டமையையும் அவதானிக்க முடிந்தது.

இன்று வொஷிங்டனில் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்துடன் நடைபெறவிருக்கும் சந்திப்புக்காக நேற்று மாலை சுமந்திரன் வொஷிங்டன் புறப்பட்டார்.

# தனுஷ்கோடி, பாம்பன் பகுதிகளை நேரில் பார்த்தார் தூதுவர் பாக்லே



தமிழக மீனவர்களுக்கு மத்திய மாநில அரசுகளால் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ள வசதிகள் குறித்து இலங்கைக்கான இந்திய தூதர் கோபால் பாக்லே நேரில் பார்வையிட்டார்.

(ந.லோகதயாளன்)

இந்திய - இலங்கை மீனவர்களுக்கு இடையிலான முரண்பாடுகளைத் தீர்த்து சுமுக நிலையை ஏற்படுத்தும் தமது முயற்சியின் ஒரு கட்டமாக இலங்கைக்கான இந்திய தூதர் கோபால் பாக்லே இராமேஸ்வரத்துக்கு நேரில் சென்றார்.

தமிழக மீனவர்களுக்கு மத்திய, மாநில அரசுகளால் ஏற்படுத்தி கொடுக்கபட்டுள்ள வசதிகளை தனுஷ்கோடி, பாம்பன் பகுதிகளில் நேற்று நேரில் அவர் பார்வையிட்டார்.

இந்த வசதிகள் குறித்து நேரில் பார் வையிடுவதற்காக நேற்று அதிகாலை இலங்கை தலைநகர் கொழும்பில் உள்ள கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து விமானத்தில் புறப்பட்டு திருச்சி விமான நிலையத்தை அவர் சென்றடைந்தார்.

பின்னர் திருச்சியில் உள்ள இலங்கை அகதிகள் மறு வாழ்வு சிறப்பு முகாமில் தங்கியுள்ள அகதிகளை சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்தார். அங்கிருந்து சாலை மார்க்கமாக புறப்பட்ட இந்திய துணை தூதர் ராமேஸ்வரம் சென்றடைந்தார்.

ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் சங்கர் லால் குமவத் மற்றும் மீன்வளத் துறை இயக்குநர்களுடன் தனுஷ்கோடி அரிச்சல் முனை, தனுஷ்கோடி வடக்கு கடற்கரை பகுதியில் மீனவர்கள் பயன்பாட்டிற்காக மாநில அரசால் கட்டி கொடுக்கப்பட்டுள்ள மீன்பிடி துறைமுகம், 1964 ஆம் ஆண்டு புயலில் அழிந்த தனுஷ்கோடி தேவாலயம் மற்றும் மக்கள் வசித்த பகுதிகளைச் சென்று அவர் பார்வையிட்டார்.

பின்னர் ராமேஸ்வரம் அடுத்துள்ள பாம்பன் குந்துகாலில் மத்திய அரசு சார்பில் 70 கோடி ரூபா மதிப்பில் கட்டப்பட்டு, ஆழ் கடல் மீன்பிடி விசைப்படகு மீனவர்களின் பயன்பாட்டிற்காக ஒப்படைக்கப்பட்ட துறைமுகத்தை நேரில் சென்று அங்குள்ள வசதிகள் குறித்துப் பார்வையிட்டார்.

மேலும் தனுஷ்கோடி பகுதியில் பார் வையிடும் போது அப்பகுதியில் உள்ள மீனவர்களை சந்தித்து கடலின் ஆழம், சீதோசன நிலை குறித்தும், மீனவர்களுக்கான வசதிகளை மத்திய, மாநில அரசு கள் எவ்வாறு செய்து கொடுத்துள்ளார்கள் என்பது குறித்தும் கேட்டறிந்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய இலங்கைக்கான இந்தியத் தூதர் மீனவர்களுக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ள வசதிகள் குறித்து பார்ப்பதற்காக தாம் வந்துள்ளார் எனத் தெரிவித்தார்.

இதனையடுத்து ராமேஸ்வரம் பேருந்து நிலையம் அருகே உள்ள நட்சத்திர விடுதியில் மீன்வளத்துறை உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை கூட்டம் நடத்தினார். பின் ராமேஸ்வரத்தில் இருந்து ரயில் மூலமாக சென்னைக்கு புறப்பட்டுச் சென்றார்.

BYJU'S

# மெய்நிகர் வகுப்பறை

## Online Classroom

ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் -
தகவல் தொழில்நுட்பம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

47

### பைஜூஸ் கற்றல் தளம்

'காலத்தின் தேவை தான் கண்டுபிடிப்பின் தாய்' என்று சொல்லுவார்கள், ஒரு நெருக்கடியான காலத்தில் கல்வி உலகின் தேவை பல களங்களை உருவாக்கியுள்ளது. இந்த மாபெரும் மாற்றத்தை நாம் இதற்கு முன் கண்டதில்லை, பல நூற்றாண்டுகளுக்கு பின் இணைய வசதியால் இந்த பெரிய மாற்றம் சாத்தியமாகியுள்ளது. கல்வி அமைப்பில் மெய்நிகர் வகுப்பறை உருவாகி வளர்ந்து வரும் முறை ஆச்சரியப்படுத்துகிறது. இதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. கொவிட் -19 அதனை விரைவுபடுத்தியுள்ளது.

இங்கு இடம் மற்றும் நேரம் என்ற தடையின்றி கற்றுக்கொள்பவர்கள் கற்க விரும்பும் எதையும் கற்றுக்கொள்வதில் நெகிழ்வுத்தன்மை உள்ளது. உலகெங்கும் பல களங்களைக் கற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை வழங்குகின்றன. வீட்டில் அமர்ந்து சுதந்திரமாக கற்பவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் இந்த வசதி பல்கிப்பெருகியுள்ளது.

இன்று கிட்டத்தட்ட அனைத்து பல்கலைக்கழகங்களும் கல்வி நிறுவனங்களும் பரந்த அளவிலான பட்டங்கள், டிப்ளோமாக்கள் மற்றும் சான்றிதழ் படிப்புகளை மெய்நிகர் வகுப்பறை மூலம் வழங்குகின்றன. ஒருவர் அவர்களின் தேவை மற்றும் விருப்பங்களுக்கு ஏற்ப தேர்வு செய்யலாம். பயனுள்ள ஊடாட்டங்கள் நடக்கின்றன. வெவ்வேறு, மாறுபட்ட அணுகுமுறைகள் கிடைக்கின்றன.மெய்நிகர் வகுப்பறை மாணவர்களின் விழிப்புணர்வையும் அறிவையும் அதிக அளவில் மேம்படுத்துகிறது.

மெய்நிகர் வகுப்பறை, படிப்பை முடிப்பதற்குத் தேவையான படிப்பு நேரங்களின் எண்ணிக்கையைத் தெளிவாகக் கட்டமைக்கின்றன. அதனை முன்கூட்டியே அறிவிக்கின்றன. பாடநெறியின் கால அளவிற்கேற்ப அவர்களின் நேரத்தை ஏற்பாடு செய்வதற்கான நெகிழ்வுத்தன்மையை வழங்குவது இதன் முக்கிய நன்மையாகும். மேலும் புதிய சிந்தனை வழியைத் திறக்கும் மற்றும் சம்பந்தப்பட்ட பாடத்திட்டத்தை சிறந்த முறையில் புரிந்துகொள்ளும் ஒரு களமாக மெய்நிகர் வகுப்பறை காணப்படுகின்றது எனலாம்.

இன்றைய சவால்களை எதிர்கொள்ளும் வகையில் சிறப்பாக பாடத்திட்டங்கள் வடிவமைக்கப்படுகின்றன.

டிஜிற்றல் வகுப்பறை மற்றும் மின் -உரை புத்தகங்கள், அத்தியாவசியத் திறன்களை விரைவான வழியில் பெறுவதற்கான சிறந்த முறையாகும். இப்போது இந்த வாய்ப்புக்கள் தனியார் வகுப்புக்களாகவும் கிடைக்கின்றன. அதாவது பாடசாலைக்கல்விக்கு மேலதிகமாக பாடசாலைப்பாடத்திட்டத்தை வினைத்திறனுடன் தனியார் கல்வியில் கற்க முடியும் என்ற நிலை உருவாகியுள்ளது.

இந்த மெய்நிகர் தனியார் வகுப்பக்கள் பற்றிய விடயங்களைக் கடந்த தொடரில் பார்த்திருந்தோம். குறிப்பாக ஐ.பி.எல். மற்றும் உலகக் கோப்பை கிரிகெட் போட்டிகளில் நேரடி ஒளிபரப்பின் போது அதிகளவு விளம்பரப்படுத்தப்பட்ட இந்தியாவில் மெய்நிகர் தனியார் வகுப்பக்கான செயலிகள் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். அதில் இரண்டு செயலிகள் அதிகளவு விளம்பரத்துக்காகச் செலவிட்டு பெற்றோரைக்கவர முயற்சிக்கின்றன.

இந்தியாவின் மெய்நிகர் கல்வியென்றால் அன் அக்கடமி மற்றும் பைஜூஸ் என்ற பெயர்கள் உடனடியாக நினைவுக்கு வரும்.

இந்த இரண்டு இணையவழி கல்வித் தளங்களும் தங்கள் சந்தைப்படுத்தல் பிரசாரங்களை இந்தியாவில் உள்ள அனைவருக்கும் தெரியும் அளவிற்கு உருவாக்கியுள்ளன. இதில் பைஜூஸ் கற்றல் தளம் பற்றிவிரிவாகப்பார்க்கலாம்.

பைஜூஸ் தளம் ஆரம்பத்தில் 4 முதல் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மட்டுமே கற்பிப்பதில் கவனம் செலுத்தியது. பின்னர் இந்தியாவின் போட்டித் தேர்வுச் சந்தையின் விரைவான வளர்ச்சியைக் கண்டு, பைஜூஸ் இந்தச் சந்தையிலும் முன்னேறி, விசேட உயர்பதவித்தேர்வுகளுக்கான உள்ளடக்கத்தையும் வழங்கத் தொடங்கியுள்ளது.

இருப்பினும், இந்த மெய்நிகர் கல்வி தளத்தில் விற்கப்படும் பெரும்பாலான படிப்புகளுக்கான கட்டணம் மிகவும் விலை உயர்ந்தாகும்

பைஜூஸ் உங்களுக்கு கற்றல் பொருட்கள், கிட் பேக், டேப்லெட் மற்றும் தனிப்பட்ட வழிகாட்டியின் சேவைகளை வழங்குகிறது. இங்கு வழங்கப்படும் டேப்லெட்டின் தனிச்சிறப்பு என்னவென்றால், இதை வேறு தேவைக்குப் பயன்படுத்த முடியாது. பைஜூவின் மெய்நிகர்; தளமானது இணையவழி வீடியோ விரிவுரைகளுக்கான அணுகலை வழங்குகிறது. டேப்லெட்டுடன், பைஜூவின் குழுவிடமிருந்து மெமரி கார்டும் வழங்கப்பட்டுள்ளது, அதில் முன்பே பதிவு செய்யப்பட்ட அனைத்து வீடியோக்களும் ஏற்கனவே உள்ளன.

இந்த மெமரி கார்டை பைஜூஸ் வழங்கும் அதே டேப்லெட்டில் மட்டுமே பயன்படுத்த முடியும், மேலும் உங்கள் டேப்லெட் சேதமடைந்தாலோ அல்லது உடைந்தாலோ, அதை சரிசெய்யும் வரை காத்திருக்க வேண்டியிருக்கும்.

பைஜூஸ் இப்போது இந்தியாவின் மிகப்பெரிய டிஜிறற்ல் கற்றல் நிறுவனமாகும். மாணவர்கள் தங்கள் கற்றல் வகுப்புகள் மற்றும் கற்றல் செயலி மூலம் கற்றலை இலகுவாகவும் வினைத்தினுடனும் கொண்டுசெல்ல உதவுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த ஆசிரியர்களைக் கொண்டுள்ளது. மாணவர்கள் கற்றலை மகிழ்வாகவும் பயனுள்ளதாகவும் மாற்ற பதிப்புரிமை பெற்ற கற்பித்தல் நுட்பங்களைப் பயன்படுத்துகின்றனர். ஆசிரியர்கள் குழு உலகத் தரம் வாய்ந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, இளம் மனங்களுக்கு எளிமையான கல்வியை வழங்கவும், நீண்ட காலத்திற்கு அவர்களைத் தயார்படுத்தவும் செய்கிறது.

இந்த இயங்குதளம் வீடியோ வடிவில் ஊடாடும் கல்வியை வழங்குகிறது. 6-11 வகுப்புகளுக்கான பைஜூவின் அமர்வுகள் மாணவர்களுக்கு கணிதம், இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் ஆகிய பாடங்களைக் கற்பிக்கின்றன. பயிற்சிக்கு பல பயிற்சிகள் கிடைக்கும், இதன் மூலம் நாம் பாடத்தை நன்கு அறிந்துகொள்ள முடியும்.

எந்தவொரு தேர்வுத் தயாரிப்பிற்கும், பாடத்திட்டம் மிக முக்கியமானது, பைஜூஸ் பயன்பாடு ஒவ்வொரு பாடத்துக்கும் நன்கு கட்டமைக்கப்பட்ட பாடத்திட்டத்தை வழங்குகிறது, இது மாணவர்கள் முதன்மை தேர்வுக்கு முழுமையாக தயாராக இருக்க மிகவும் உதவியாக இருக்கும்.

இந்தப் பயன்பாட்டில் 3டி அனிமேசன் மற்றும் இன் - ஏர் ப்ரொஜெக்சன் டெக்னிக் மூலம் உருவாக்கப்பட்ட சிறந்த வீடியோ விரிவுரைகள் உள்ளன. இதில் கவரும் வீடியோ விரிவுரைகள் மிகவும் சிறப்பாக உள்ளது,விஞ்ஞானம் தொடர்பான ஒரு மணிநேரம் படிக்கும் பல அத்தியாயங்கள் 20 நிமிட வீடியோ விரிவுரையைப் பார்ப்பதன் மூலம் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியும்.

ஒரு வீடியோ விரிவுரையைப் பார்த்த பிறகு, மாணவர் ஒரு தேர்வில் கலந்து கொள்ள வேண்டும், இது மாணவரின் புரிதல் அளவை ஆய்வு செய்யப்படுகிறது. ஆய்வில் மாணவரின் பதிலின் படி, அந்தக் பலவீனமான கருத்துக்களுக்கு வலுப்படுத்த மாணவர் வழிநடத்தப்படுவார்.

மேலும் மாணவர்களை மதிப்பிடுவதற்கு அத்தியாயம் வாரியாக பரீட்சைகள் நடத்தப்படும். இதில் கணிதம், இயற்பியல், உயிரியல் மற்றும் வேதியியல் போன்ற கடினமான பாடங்களைக் கற்றுக்கொள்வது எளிதாக்கப்பட்டுள்ளது. இங்கு மாணவர் தனது சொந்த செயல்திறனை அறிய உதவும் சுயமதிப்பீட்டு முறையும் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஒரு மாணவன் இந்தப் பயன்பாட்டைப் பயன்படுத்தத் தொடங்கியவுடன், அவருக்கு ஒரு தனிப்பட்ட வழிகாட்டி நியமிக்கப்படுகிறார். இந்த தனிப்பட்ட வழிகாட்டிகள் பொதுவாக குழந்தைகளுக்கு பாடத்திட்டம் மற்றும் வீடியோ விரிவுரைகள் தொடர்பான சந்தேகங்களைத் தீர்க்க உதவுகிறார்கள். இந்த செயலியில் பெற்றோர் பயன்பாடு உள்ளது இது குழந்தை என்ன படிக்கிறது மற்றும் அவர் எவ்வாறு செயல்படுகிறார் என்பதைக் கண்காணிக்க பெற்றோருக்கு உதவுகிறது.

# வரவு-செலவுத் திட்டம் பலவீனமானது என்றாலும் ஆதரவாக வாக்களிப்பேன்

## விஜயதாஸ ராஜபக்ஷ இப்படிக் கருத்து

வரவு - செலவுத் திட்டம் பலவீனமானது என்றாலும் அதற்கு ஆதரவாகவே வாக்களிக்கப் போவதாக நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஊடகவியலாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இம்முறை வரவு - செலவுத் திட்டம் நாட்டின் பொருளாதாரத்தைப் பாரிய அச்சுறுத்தலுக்கு இலக்காகக் கூடியது என்றாலும் மாற்று வழிகள் எதுவுமில்லை என்ற காரணத்தால் ஆதரவாக வாக்களிக்கப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் -

வருமானம் 2000 பில்லியன் ரூபாவாகவும், செலவு 3000 பில்லியன் ரூபாவாகக் காணப்படுகின்றது. இந்த செலவுகளை எவ்வாறு ஈடு செய் வது என்பது பற்றி வரவு - செலவுத் திட்டத்தில் தெளிவாக விளக்கப்பட வில்லை.

வரவு - செலவுத் திட்டம் எவ்வளவு பலவீனமானது என்றாலும் அடுத்த ஆண்டுக்கான அரச சேவையை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். எனவே மாற்று வழியில்லை என்பதால் இந்த வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவளிப்பதைத் தவிர வேறு வழியில்லை. வரவு - செலவுத் திட்டத்தைத் தோற்கடித்தால் மாற்று அரசாங்க மொன்றை உருவாக்க ஆயத்தமாக வேண்டும். அவ்வாறான ஒரு சாத்தியம் இல்லையென்றால் இந்த வரவு - செலவுத் திட்டத்தை ஆதரிக்க வேண்டும் என விஜயதாஸ ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.



# ஈஸ்டர் தாக்குதல் பின்னணி அரசியல் சூழ்ச்சி கிடையாது

## ரொஹான் குணரட்ன திட்டவட்டம்

ஈஸ்டர் தாக்குதல்களின் பின்னணியில் அரசியல் சூழ்ச்சி எதுவும் கிடையாது எனச் சர்வதேச பயங்கரவாதம் தொடர்பான நிபுணர் பேராசிரியர் ரொஹான் குணரட்ன தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் -

இந்தத் தாக்குதல் ஏன் நடத்தப்படுகின்றது என்பது தொடர்பாக சஹ்ரான் காணொளியில் விளக்கியுள்ளார். அல்லாஹ்வின் விருப்பத்தின் பேரில் ஜிஹாதிய புனிதப் போர் நடத்தப்படுகின்றது.

நியூஸிலாந்தில் பள்ளிவாசல் ஒன்றில் தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்குப் பழிவாங்கும் நோக்கில் கிறிஸ்தவ தேவாலயங்கள் மீது தாக்குதல் நடத்தப்படுகின்றது. அல்லாஹ்வின் வீட்டுக்குள் தலையீடு செய்ய அனுமதிக்கப்படாது.




சஹ்ரானுடன் பேசிய அபுஹிந் என்பவர் இந்திய பொலிஸ் உத்தியோகஸ்தராவார், அவரே ஈஸ்டர் தாக்குதல் பற்றி இலங்கைக்குத் தகவல் வழங்கியவர். தாக்குதல் நடத்தப்படுவதற்கு சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்னதாகவே இந்த எச்சரிக்கை வழங்கப்பட்டது.

இந்த தாக்குதலின் பின்னணியில் அடிப்படைவாத, மதவாத மற்றும் பயங்கரவாத செயற்பாடுகளே காணப்படுகின்றன, அரசியல் சூழ்ச்சித் திட்டமில்லை என பேராசிரியர் ரொஹான் குணரட்ன தெரிவித்துள்ளார்.

# இந்த அரசு பெண்களை உதாசீனம் செய்கின்றது

## கீதா குமாரசிங்க தெரிவிப்பு

இந்த அரசாங்கம் பெண்களை உதாசீனம் செய்கின்றது என ஆளும் ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க கடுமையான குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.



நாடாளுமன்றில் உரையாற்றுகையில் அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் -

அன்று கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகித்த 53 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 52 பேருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டன. எனினும், இன்று என்னை மட்டும் நாடாளுமன்றின் பின் வரிசையில் அமர்த்தியுள்ளனர்.

இதன் மூலம் பெண்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது என்பது புலனாகின்றது. இது தொடர்பில் மேலே உள்ள கடவுள் பார்த்துக் கொள்வான், எந்தவொரு தாக்கத்துக்கும் எதிர்த்தாக்கம் உண்டு.

அன்று கூட்டு எதிர்க்கட்சியை விட்டு சுதந்திரக் கட்சிக்குப் பலர் தாவிய போதிலும் நான் அவ்வாறு செய்யாது கட்சியிலேயே இருந்தேன்.

அன்று கூட்டு எதிர்க்கட்சிக்குக் கறுப்பு பட்டி கொண்டு வரக்கூட எவரும் இருக்கவில்லை, நானே அதனையும் கொண்டு வந்தேன். இன்று ஒருவேளை சாப்பிடும் மக்களுக்கு மூன்று வேளை சாப்பிட நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தைக் கோருகின்றேன்.

பட்டினியில் இருக்கும் மக்களது பட்டினியைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் சினிமா துறைக்குப் பெரிதாக எதுவும் செய்யவில்லை. தேர்தல் காலத்தில் அரசியல் கட்சிகளின் பின் ஓடும் கலைஞர்களுக்கு இது நல்ல பாடமாக அமையட்டும் என கீதா குமாரசிங்க அரசாங்கத்தை மிகக் கடுமையாக விமர்சித்துள்ளார்.

# பிரதமரின் தனிப்பட்ட நன்கொடையில் 100 குடும்பங்களுக்கு கிடைத்த வசதி

அநுராதபுரம் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட குறைந்த வருமானம் பெறும் 100 குடும்பங்களுக்கு குடிதண்ணீர் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தனிப்பட்ட நன்கொடையில் குழாய் நீர் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதனை அடையாளப்படுத்தும் வகையில் ஐந்து குடும்பங்களுக்கான அந்த உரிமைகள் வழங்கும் நிகழ்வு மிரிசவெட்டிய ரஜமஹா விஹாரையில் இடம்பெற்றதாக பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் பிரதமர் மற்றும் அரச அதிகாரிகள் பலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவிடம் இருந்து 50 கோடி அமெரிக்க டொலர் அவசர கடனாக இலங்கை பெறவுள்ளதாக தகவல்

கொழும்பு, நவ. 22

எரிபொருளை இறக்குமதி செய்வதற்காக இந்தியாவிடம் இருந்து 50 கோடி அமெரிக்க டொலர்களை அவசர கடனாகப் பெற அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக நம்பத் தகுந்த ஆதாரங்களை மேற்கோள்காட்டி சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அரசாங்கத்தின் உயர்மட்டத் தலைவர்கள் இந்திய அரசாங்கத்துடன் ஏற்கனவே கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளனர் என அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் குறித்த ஊடகத்திடம் உறுதிப்படுத்தியுள்ளார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வெளிநாட்டு கையிருப்பு பற்றாக்குறையால் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதுடன், எரிபொருள் இறக்குமதிக்குத் தேவையான அமெரிக்க டொலர்களின் இருப்புகளின்றி சிரமங்களையும் எதிர்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் கடந்த வாரம் மூடப்பட்டதுடன், அதனை மீள ஆரம்பிக்கும் திகதி இன்னும் அறிவிக்கப்படவில்லை.

இதேவேளை எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு மாதாந்தம் 350 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுவதாகவும், அதற்கான பணத்தை தேடுவதே உண்மையான பிரச்சினையாக மாறியுள்ளதாகவும் எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில கடந்த திங்கட்கிழமை அமைச்சரவை கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

இந் நிலைமையை கருத்தில் கொண்டு எரிபொருள் இறக்குமதிக்காக 50 கோடி அமெரிக்க டொலர்களை அவசர கடனாக இந்தியாவிடமிருந்து பெற அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகக் குறித்த சிங்கள ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

# சந்தஹிரு சேய தாது கோபுரத்தை நிர்மாணிக்க காணி அனுமதியை பலவந்தப்படுத்தி பெற்றனர்!

## முன்னாள் பணிப்பாளர் கலாநிதி செனரத் திஸாநாயக்க போட்டுடைப்பு

சந்தஹிரு சேய தாது கோபுரத்தை நிர்மாணிக்கத் தேவையான காணிக்கான அனுமதியை தன்னை பலவந்தப்படுத்தி பெற்றுக்கொண்டனர் என இலங்கை தொல்லியல் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் கலாநிதி செனரத் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சிங்கள வலையொளித்தள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

குறித்த காணி அமைந்துள்ள இடத்தில் தாது கோபுரம் ஒன்றை நிர்மாணிக்க வேண்டாம் என நான் கோரினேன். தேவையாக இருந்தால் சிறிய தாது கோபுரம் ஒன்றை நிர்மாணிக்குமாறு கூறினேன்.

எனினும் நான் வழங்கிய ஆலோசனைகள் காரணமாக அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கேட்கவில்லை.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆலோசனை வழங்கியவர்கள் அவரை மன்னன் என வர்ணித்திருந்தனர். நாட்டை ஆட்சி செய்த ஏனைய மன்னர்கள் தாது கோபுரங் களை நிர்மாணித்துள்ளதால், நீங்களும் நிர்மாணியுங்கள் என அவர்கள் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியிருந்தனர்.

எவ்வாறாயினும் சந்தஹிரு சேய தாது கோபுரத்தை நிர்மாணிக்க செலவிட்ட பணம் அநியாயமானது. அதனை போரில் அங்கவீனமுற்ற படையினருக்கு செலவிட்டிருந்தால் நல்லது.

போர் வெற்றிக்காக நாட்டை ஆட்சி செய்த எந்த மன்னர்களும் தாது கோபுரங்களை நிர்மாணிக்கவில்லை. ஆனால், இந்த தாது கோபுரம் போர் வெற்றியை நினைவுகூரும் வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அரச சேவை மீது எனக்கு வெறுப்பு ஏற்பட்டது. இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவின் அழுத்தங்கள் இதற்கு காரணம் எனவும் செனரத் திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.



30 வருடங்களுக்கு மேலாக இலங்கை தொல்லியல் திணைக்களத்தில் கடமையாற்றி வந்த செனரத் திஸாநாயக்க அந்த பதவியை இராஜினாமா செய்து விட்டு, தற்போது களனி பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறை விரிவுரையாளராகக் கடமையாற்றி வருகிறார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.11.2021 இல் வெளியிடப்பெற்றது.

# அரசியல் கைதிகள் விரைவில் விடுதலை!

## வவுனியாவில் 'ஒரே நாடு - ஒரே சட்டம்' செயலணித் தலைவர் ஞானசார தேரர் தெரிவிப்பு



(வவுனியா நிருபர்)

அரசியல் கைதிகள் விரைவில் விடுதலை செய் யப்படவுள்ளனர் என்று 'ஒரே நாடு - ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணியின் தலைவர் ஞானசார தேரர் தெரிவித்தார் என்று முன்னாள் அரசியல் கைதி செல்வநாயகம் அரவிந்தன் தெரிவித்தார்.

'ஒரே நாடு - ஒரே சட்டம்' செயலணியுடன் நேரூர் வவுனியாவில் நடத்திய சந்திப்பு தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட 'ஒரே நாடு - ஒரே சட்டம்' என்ற செயலணியின் கூட்டம் செயல ணித் தலைவர் ஞானசார தேரர் தலைமையில் வவுனியாவில் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில் அரசியல் கைதிகளின் விடுதலை, தொல்பொருள் திணைக்களங்களின் நடவடிக்கை, பௌத்த விகாரரைகளை அமைப்பது, எமது மத வழிபாடுகள் மறுக்கப்படுவது தொடர்பான பிரச்சினை, மாவீரர் தினம் தொடர்பில்எமது உரிமைகள்மறுக்கப்படுவது தொடர்பான பிரச்சினை குறித்து பேசியிருந்தேன்.

அப்போது ஞானசார தேரரிடமிருந்து வந்த பதிலில், 'அரசியல் கைதிகள் தொடர்பில் ஜனாதிபதி சட்டமா அதிபர் திணைக்களத்துடன் பேசியுள்ளார். மிக விரைவில் அவர்கள் விடுதலை செய் யப்படுவார்கள் என்ற செய்தி கிடைத்தது. இது தொடர்பில் ஜனாதிபதி என்னிடம் தெரிவித்தார்' என்றார்.

இலங்கையில் தமிழ் பௌத்தர்கள் இருந்துள்ளார்கள். மகாவம்சத்தில் தமிழ் பௌத்த துறவிகள் இருந்தமைக்கான ஆதாரம் உண்டு. தமிழ் மக்களின் வழிபாட்டுக்கான உரிமை மறுக்கப்படும் இடங்களைப் பார்வையிடுவதாக ஞானசார தேரர் தெரிவித்தார். அத்துடன் குருந்தூர் மலையில் பௌத்த சின்னம் இருக்கின்றது எனத் தெரிவித்தார். அதனை நானும் ஏற்றுக் கொள்கின்றேன். ஆனால், சிவனுக்கும் அங்கு சிலை இருந்தது. அது பின்பு தமிழர்களால் அகற்றப்பட்டு முருகனுக்கான வழிபாடு, அதன் பின் பிள்ளையார் வழிபாடு இடம்பெற்றது. அது மக்களின் அறியாமையால் நடந்தது. தொல்பொருள் ரீதியில் எமக்கும் அங்கு உரிமை உள்ளது என நான் தெரிவித்தபோது, கதிர்காமம் போன்று இரு மதத்தினரும் வழிபடக் கூடிய நிலை வருவதைத் தான் விருப்புவதாகத் தெரிவித்தார்.

விரும்பியோ விரும்பாமலே எமது பகுதிகளில் பௌத்த விகாரைகள் அமையப் போகின்றன. 1600 இற்கும் மேற்பட்ட கோயில்கள் அழிக்கப்பட்டுள்ளன. இதற்கான எந்தவித நடவடிக்கைகளுகம் இல்லை. பலமான எதிரியை நாம் எதிர்க்க முடியாது. அதனால் நாம் இணைந்துவழிபாடுகளைமேற்கொள்ள முடியும்.

மாவீரர் தினம் தொடர்பில் கேட்டிருந்தேன். பல்வேறு காலங்களிலும் மரணித்த மாவீரர்களை நினைவுகூர உரிமை உள்ளது எனத் தெரிவித்தேன். படுகொலைகள் பல நடந்தன. அதனை நாம் அன்றாடம் நினைவுகூர முடியாது. இதனை ஒரே வாரத்தில் செய்கின்றோம் எனத தெரிவித்தேன். இதன்போது இந்த விடயம் தொடர்பில் தான் முழுமையாகப் பதில் செல்ல முடியாது எனவும், இருந்தாலும் விடுதலைப்புலிகள் ஆயுத ரீதியாக மேற்கொண்ட விடயம் தவறு. அதற்கு அனுமதிக்க முடியாது. உங்களுடைய வலிகள், பிரச்சினைகளைப் புரிந்திருந்தாலும் இதற்கான பதிலை வழங்கக் கூடிய நிலையில் இல்லை. எங்களுடன் சேர்ந்து இவற்றை மறந்து நீங்கள் பயணிக்க வேண்டும் எனக் கூறினார். இதைவிட பிரச்சினையான பல விடயங்கள் இருக்கின்றன. சாப்பாடு இல்லை, வீடு இல்லை, தண்ணீர் இல்லை இவை பற்றி நாம் பார்ப்போம் எனத் தெரிவித்தார்.

அதேநேரம் இந்த 'ஒரே நாடு - ஒரே சட்டம்' செயலணியின் நோக்கமாக நான் உணர்வது, யாழ்ப்பாண தேசவழமைச் சட்டம் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு இருக்கும் சரிஜா சட்டத்தை இல்லாதொழிக்கப்போகின்றார்கள். சைவர்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கான உக்கிரத்தை ஏற்படுத்தி இன்னுதொரு குளிர் காய்த்தல் நிகழ்வை நடத்தப் போகின்றார்கள். கிறிஸ்தவ மற்றும் சைவ மோதலை ஏற்படுத்தக்கூடிய அத்தனை விடயங்களும் 'ஒரே நாடு - ஒரே சட்டம்' செயலணியின் ஊடாகப் பெறப்படுகின்றது. இதுதான் இதன் நோக்கமாக இருக்கும் என நான் நம்புகின்றேன். கிறிஸ்தவர்கள், சைவர்களுக்கான பிரச் சினைகளுக்கு நீண்ட நேரம் கொடுக் கின்றார்கள். அதனைத் தேடி தேடி எழுதுகின்றார்கள். எனவே, மக்கள் தமது பிரச்சினைகளைப் பேச வேண்டும். அவர்களின் நிகழ்சி நிரலில் பலிக்கடா ஆகிவிடாதீர்கள் - என்றார்.

## தமிழர்களின் பிரதிநிதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

'ஒரே நாடு – ஒரே சட்டம்' செயலணியின் மக்கள் கருத்தறியும் பணி தற்போது வடக்கு மாகாணத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதன்படி, அந்தப் பணி நேற்று யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியொன்றில் நடைபெற்றது.

ஞானசார தேரர் அங்கு ஊடக சந்திப்பொன்றை நடத்தினார்.

அதன்போது அவர் –

நாம் ஒன்றுபட எந்தவொரு தமிழ் அரசியல்வாதிகளும் விரும்பவில்லை. அதனால் ஒரே நாடு – ஒரே சட்டத்தையும் அவர்கள் விரும்பவில்லை.

போதைப்பொருளால் ஆயிரக் கணக்கானவர்கள் உயிரிழந்திருக்கிறார்கள். விளக்கேற்றுவதற்காக அனுமதி கேட்கும் தமிழ் அரசியல்வாதிகள் போதைப்பொருள் தடுப்பு மத்திய நிலையத்தை உருவாக்கத் தயாராக இல்லை. தமிழர்களது பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் என்ன செய்கின்றார்கள்?

கடந்த 19ஆம் திகதி அன்று கார்த்திகை விளக்கீடு நிகழ்வின்போது, பாதுகாப்புத் தரப்பினர் தலையீடு செய்தமை தொடர்பில் அது சம்பந்தமான விளக்கத்தை நாம் பெறுவோம் – என்றார்.

இதன்போது, 'ஒரே நாடு – ஒரே சட்டம்' செயலணியில் தமிழர்களை முதலில் சேர்க்காமல் எதிர்ப்புக்கள் வந்த பின்னர் சேர்த்தமை தொடர்பாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர் குறிப்பிடுகையில் –

இந்தச் செயலணியை ஆரம்பித்த போது நாட்டுப் பிரச்சினை ஒன்றாகவே இருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் தமிழர்களை நியமிக்கவேண்டிய தேவையிருக்கவில்லை.

பொதுவாகவே தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் ஒரே பிரச்சினையே காணப்படுகின்றது. அந்தச் சந்தர்ப்பத்தில் முஸ்லிம்களைத் தெரிவு செய்ய வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. முஸ்லிம்களுக்குப் பல சட்டங்கள் இருப்பதால் அந்தச் சட்டத்தை பொதுச் சட்டத்தின் கீழ் கொண்டுவர விரும்பினோம்.

இதன்படி தேசவழமைச் சட்டம், கண்டியச் சட்டம, முஸ்லிம் சட்டம் ஆகியவற்றில் உள்ள நல்லதையும் பெற்று சிறந்த சட்டத்தை ஏற்படுத்துவோம். கடந்த காலங்களில் நடைபெற்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நடக்காமல் இருப்பதற்காக ஒரே நாடு ஒரே சட்டத்தை உருவாக்குவோம் – என்றார்.

இதன்போது 'ஒரே நாடு – ஒரே சட்டம்' செயலணியின் உறுப்பினர்களான யோகேஸ்வரி பற்குணராஜா, ஐயம்பிள்ளை தயானந்தராஜா உள்ளிட்ட உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

## மேலும் 19 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குணவர்தன உறுதிப்படுத்தியுள்ளார்.

இவ்வாறு மரணமடைந்த 19 பேரில் 12 பேர் ஆண்கள், 07 பேர் பெண்கள் என்பதுடன், 60 வயதுக்கு மேற்பட்டோர் 11 பேர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 127 ஆக அதிகரித்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# 12 கைதிகளுக்கு கொரோனா உறுதி

பதுளை சிறைச்சாலையில் தடுத்து வைக் கப்பட்டுள்ள 12 கைதிகளுக்குக் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட பி.சி. ஆர். பரிசோதனைகளில் இந் தத் தொற்றாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர் என்று பதுளை நிர்வாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பியல் பத்ம தெரிவித்துள்ளார்.

95 கைதிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளிலேயே 12 தொற்றாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.

மேலும், கொரோனாத் தொற்றாளர்களைக் கண்டறிய ரெபீட் அன்டிஜன் பரிசோதனைகளை நடத்தவுள்ளதாகவும் பியல் பத்ம மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# வன்முறைக் கும்பல் பெரும் அட்டகாசம்!

## தனித்து நின்று விரட்டியடித்த குடும்பஸ்தர்

(ந.லோகதயாளன்)

கிளாலிப் பகுதியில் உள்ள வீடொன்றினுள் அத்துமீறி நுழைந்த வாள்வெட்டுக் கும் பலை குடும்பஸ்தர் தனித்து நின்று வீட்டில் இருந்த கத்தி மற்றும் மிளகாய்த் தூள்துணையுடன் விரட்டி அடித்துள்ளார்.

கிளாலிப் பகுதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிவருவதாவது,

குறித்த பகுதியில் உள்ள வீடொன்றினுள் அதிகாலை 2 மணியளவில் வாள்கள், கைக்கோடரிகள் உள்ளிட்ட கூரிய ஆயுதங்களுடன் 10 க்கும் மேற்பட்டவர்கள் அடங்கிய கும்பல் ஒன்று உட்புகுந்து வீட்டின் ஜன்னல்கள் மீது தாக்குதல் மேற்கொண்டு அவற்றின் கண்ணாடிகளை உடைத்தனர்.

பின்னர் வீட்டின் பிரதான கதவினை கோடாரியால் கொத்தினர். அதன்போது உசார் அடைந்த குடும்ப தலைவர் தனது மனைவி, பிள்ளைகளை அறைக்குள் வைத்து பூட்டி விட்டு, தனியாளாகத் தாக்குதலாளிகளை எதிர்கொள்ளத் துணிந்து சமையலறையில் இருந்த கத்தி மற்றும் மிளகாய் தூள் என்பவற்றால் தாக்குதலாளிகள் மீது தாக்குதலை மேற்கொண்டார்.

எதிர்பாராத தாக்குதலால் நிலை குலைந்த தாக்குதலாளிகள் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர்.

அதேவேளை, அவரது மனைவி பளை பொலிஸாருக்கு தொலைபேசி ஊடாக தகவல் வழங்கியதை அடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் தாக்குதலாளிகளைத் தமக்குத் தெரியும் என அவர்களின் வீடுகளை தாக்குதலுக்குள்ளான குடும்பம் இனங்காட்டியுள்ளது.

அதனடிப்படையில் அங்கு பொலிஸார் சென்றபோது சந்தேகநபர்கள் வீடுகளில் தங்கியிருக்கவில்லை. இந்நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# 230 கிலோ கேரள கஞ்சா மண்டைதீவுக் கடலில் மீட்பு

## சந்தேகநபர்கள் தப்பியோட்டம்

(ந.லோகதயாளன்)

யாழ்., மண்டைதீவுக் கடலில் வைத்து 6 கோடி 80 லட்சம் ரூபா பெறுமதி யான 230 கிலோகிராம் எடையுடைய கேரள கஞ்சாவும் படகு ஒன்றும் மண்டைதீவு கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் கடற்படையினர் விசேட ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை சந்தேகத்துக்கு இடமான முறையில் படகு ஒன்று வருவதை அவதானித்தனர்.

இதன்போது குறித்த படகைச் சுற்றி வளைத்தவேளை படகிலிருந்தவர்கள் தப்பித்துச் சென்றுள்ளனர்.

இந்நிலையில், படகில் ஏழு மூட் டைகளிலிருந்த கேரள கஞ்சாவையும் படகையும் கடற்படையினர் மீட்டனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட படகும் கஞ்சாவும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் கையளிக்கப்பட்டுள்ளன.